**கவனிக்க.-** *20.04.2011 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி II ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1756 - 2012 අප්‍රේල් මස 27 වැනි සිකුරාදා - 2012.04.27

*1756 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *488* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *489* |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, மே மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்;ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்;ராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் .

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந்தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - காலி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய விவாக பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, வைகாசி மாதம் 28 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2012, பங்குனி 30.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| காலி | காலி நாற்புறமும் சூழலும் | காலி மாவட்டப் பிரிவில் தலபிற்றிய பகுதியில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், காலி |
| காலி | காலி நாற்புறமும் சூழலும் | காலி மாவட்டப் பிரிவில் கடவத்தை பகுதியில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், காலி |
| காலி | காலி நாற்புறமும் சூழலும் | காலி மாவட்டப் பிரிவில் தலபிற்றிய பகுதியில் மேலதிக முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், காலி |

4-509

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## விவசாயத் திணைக்களம்

இலங்கை விவசாயக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கான போட்டிப் பரீட்சை - 2012
(விவசாயத்தில் டிப்புளோமா கற்கை நெறி - 2013/2015)

இலங்கை விவசாயக் கல்லூரிகளில், 2013/2015 ஆம் ஆண்டிற்கான இரண்டு வருட டிப்புளோமா கற்கை நெறிக்கு அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சையொன்று, பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படவுள்ளது. இப்பரீட்சை சிங்களம்/தமிழ் ஆகிய மொழிகள் மூலம் 2012, யூலை மாதம் 28 ஆந் திகதி பின்வரும் நகரங்களில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும் :

| பரீட்சை நடைபெறும் நகர இல. | பரீட்சை நடைபெறும் நகரம் | பரீட்சை நடைபெறும் நகர இலக்கம் | பரீட்சை நடைபெறும் நகரம் |
|---|---|---|---|
| 01 | அநுராதபுரம் | 08 | குருநாகல் |
| 02 | பதுளை | 09 | மாத்தறை |
| 03 | மட்டக்களப்பு | 10 | திருகோணமலை |
| 04 | கொழும்பு | 11 | வவுனியா |
| 05 | காலி | 12 | இரத்தினபுரி |
| 06 | யாழ்ப்பாணம் | 13 | அம்பாந்தோட்டை |
| 07 | கண்டி | 14 | கிளிநொச்சி |

குறிப்பிட்ட பரீட்சை நிலையமொன்றுக்குப் போதியளவு எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காதவிடத்து, பரீட்சார்த்தியின் இரண்டாவது விருப்பில் தெரிவான பரீட்சை நிலையம் அல்லது பரீட்சார்த்திகள் விண்ணப்பித்த நகரத்திற்கு அண்மையிலுள்ள வேறு ஒரு நிலையம் அவர்களுக்கு வழங்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த நகரம்/நகரங்களையோ போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மொழி மூலத்தையோ பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**2. இரண்டு வருட டிப்புளோமா கற்கை நெறிக்குத் தெரிவு செய்தல் :**

2.1 ஆண், பெண் இருபாலாரும் விவசாயம் சம்பந்தமான இந்த டிப்புளோமா கற்கை நெறியைப் பின்பற்றலாம். இவ்வெழுத்துப் பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சையிலும் தகுதி பெறும் விண்ணப்பதாரிகள் குண்டசாலை, அங்குணகொலபெலஸ்ஸ, பெல்வெஹெர, வவுனியா ஆகிய நான்கு விவசாயக் கல்லூரிகளுக்கும் தகைமையின் அடிப்படையிலும் மாவட்ட அடிப்படையிலும் அனுமதிக்கப்படுவர்.

2.2 இலங்கை விவசாயக் கல்லூரிகளில், கற்பிக்கப்படுகின்ற விவசாய டிப்புளோமா கற்கை நெறி மூன்றாம் நிலைக் கல்வி, தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட முற்றிலும் தொழில்சார் பயிற்சி நெறி ஆகும். பயிற்சியைப் பெற்ற பின்பு விவசாயத்தைச் சுயதொழிலாக மேற்கொள்ள விரும்பும் அல்லது பொருத்தமான தொழிலைத் தேடிக்கொள்ள விரும்பும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொருத்தமான வகையில் இப்பயிற்சிநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

2.3 இப்பயிற்சி நெறியின்போது கல்லூரி விடுதியில் தங்கியிருத்தல் கட்டாயமாகும். இப்பயிற்சிக் காலத்தின்போது மாணவர்கள், வேறு எந்த ஒரு நிறுவனத்திலும் முழுநேர, பகுதி நேர பயிற்சிகளையோ அல்லது தொழில் வாய்ப்பையோ பெறுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். வேறு எந்த ஒரு நிறுவனத்திலும் எந்த ஒரு மாணவரும் அவ்விதமான பயிற்சியைப் பெறுவதாக அல்லது தொழில் வாய்ப்பைப் பெற்றிருப்பதாக நிரூபிக்கப்பட்டால், அம்மாணவர் விவசாயக் கல்லூரியிலிருந்து நீக்கப்படுவார்.

2.4 சிலவேளைகளில் சனி, ஞாயிறு தினங்களிலும் வகுப்பு நடைபெறுவதால், மாணவர்கள் மாதத்தில் ஒரு வார இறுதியில் மாத்திரமே விடுதியை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கப்படுவர். வயல் நிலங்களிலும், மேட்டுநிலங்களிலும் பயிற்சியில் ஈடுபட விருப்பமுடையவராக இருக்க வேண்டும். இப்பயிற்சியின் பின்னர், உலர் வலயத்தின் கிராமப் பகுதிகளிலேயே அதிகமான வேலைவாய்ப்புகள் காணப்படுவதால் இப்பிரதேசத்தில் சேவையாற்ற விருப்பமுடையவராக விண்ணப்பதாரி இருத்தல் வேண்டும். பயிற்சியின் பின்னர் தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொடுக்கும் பொறுப்பு விவசாயத் திணைக்களத்தையோ, அரசையோ சார்ந்ததல்ல.

2.5 இலங்கை தொழில் நுட்பவியலாளர் சேவையின் விவசாயப் போதனாசிரியர் போன்ற சில பதவிகளுக்காகவும் வேறு சில அரச பதவிகளுக்கும் விண்ணப்பிப்பதாயின் விவசாய டிப்புளோமா தகைமைக்கு மேலதிகமாக க. பொ. த. (உ.த.) உயிரியற் பிரிவு பாடங்களில் 03 பாடங்களை ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**3. அனுமதி பெறுவதற்கான தகைமைகள் :**

3.1 (அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய மூன்று பாடங்களிலும் கட்டாயமாக திறமைச் சித்தி பெற்றிருப்பதோடு, சமூகக்கல்வி, விவசாயம் ஆகிய பாடங்களுள் ஏதாவது ஒன்றிலும் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும். (இதன்படி மொத்தம் நான்கு (04) திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்). இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். (இவ்விரண்டு அமர்வுகளில் ஒன்றில் மூன்று (03) திறமைச் சித்திகளுடன் ஆகக் குறைந்தது ஐந்து (05) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்) ;

அத்துடன்

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் பிரிவில் தோற்றி தாவரவியல், இரசாயனவியல், பௌதீகம், விலங்கியல், விவசாயம், உயிரியல் ஆகிய ஆறு பாடங்களில் ஏதாவது மூன்றில் (03) ஒரே அமர்வில் சித்தியடைந்திருக்க வேண்டும். இத்தகைமைகளைக் கொண்டிருப்பவர்களுக்கு தெரிவின்போது மாவட்ட அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்படும் ;

அல்லது

(ஆ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய மூன்று (03) பாடங்களிலும் கட்டாயமாக திறமை சித்தி பெற்றிருப்பதோடு, சமூகக்கல்வி, விவசாயம் ஆகிய பாடங்களுள் ஏதாவது ஒன்றிலும் திறமையைச் சித்தியுடன் (இதன்படி மொத்தம் நான்கு (04) திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும். இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். இவ்விரண்டு அமர்வுகளில் ஒன்றில் மூன்று (03) திறமைச் சித்திகளுடன் ஆகக் குறைந்தது ஐந்து (05) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் உயிரியல் பிரிவில் தோற்றி தாவரவியல், இரசாயனவியல், பௌதீகம், விலங்கியல், விவசாயம், உயிரியல் ஆகிய ஆறு பாடங்களில் ஒன்று (01) அல்லது இரண்டு (02) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் (க. பொ. த. (உ. த.) கணிதப் பிரிவில் கற்ற மாணவர்கள், இரசாயனவியல் அல்லது பௌதீகவியல் பாடங்களில் சித்தியடைந்திருத்தல், இக்கற்கை நெறிக்கு அனுமதி பெறுவதற்கான தகுதியாகக் கருதப்படமாட்டாது). இத்தகைமைகளை பெற்றிருப்பவர்கள் 3.1 (அ) பந்திக்கு ஏற்ப விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுள் தகைமையுள்ளவர்கள் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அம்மாவட்டங்களில் மேலும் வெற்றிடங்கள் காணப்பட்டால் மட்டுமே தெரிவு செய்யப்படுவர்.

(இ) ஆங்கில மொழியில் கற்கை நெறியை பயில விரும்பினால், க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

3.2 வயது.- 2012.05.31 அன்று விண்ணப்பதாரிகள் 17 வயதிற்குக் குறையாமலும், 25 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். அரச சேவையில் தொழில் புரிபவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவராகமாட்டார்.

3.3 மேலே 3.1, 3.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிக்கான தகைமைகளைக் கவனமாக வாசிக்கும்படி விண்ணப்பதாரிகள் கேட்கப்படுகின்றனர். தேவையான கல்வித் தகைமைகள் இல்லாத அல்லது குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குள் இல்லாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3.4 பரீட்சை பெறுபேறுகளுக்காக காத்திருப்பவர்கள் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் ஆவர். தற்போது அரச திணைக்களமொன்றில் அல்லது நிறுவனமொன்றில் இரு வருட விவசாயப் பயிற்சி நெறியொன்றை பயிலும் மாணவர்கள் இப்பயிற்சி நெறியை பின்பற்ற தகுதியற்றவர்கள் ஆவர்.

3.5 இலங்கை விவசாயக் கல்லூரிகளில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலேயே கற்பிக்கப்படுவதனால், விண்ணப்பதாரிகள் இவற்றுள் ஏதாவது ஒரு மொழியில் இக்கற்கை நெறியைப் பின்பற்றுவதற்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் இயலுமானவர்களாக இருத்தல் வேண்டும். தெரிவுசெய்த மொழியில் தொடர்ச்சியாகப் பயில்வதோடு, இடைநடுவில் பயிலும் மொழியை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

3.6 ஆங்கில மொழியில் பயிற்சி நெறிகள் குண்டசாலை விவசாயக் கல்லூரியில் மாத்திரமே வழங்கப்படும். ஆங்கில மொழியில் பயில விரும்பும் விண்ணப்பதாரிகள் தாம் விரும்பும் மொழியில் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றலாம். அத்துடன் ஆங்கில மொழியில் பயில விரும்பும் விண்ணப்பதாரிகள் I, II ஆம் வினாப்பத்திரங்களுக்கு மேலதிகமாக III ஆம் வினாப்பத்திரத்திற்குமான ஆங்கில மொழி வினாப்பத்திரத்திற்கும் தோற்றுதல் வேண்டும். குறிப்பிட்ட மொழியில் பயிற்சி நெறியைப் பயில தெரிவுசெய்யப்பட்டோர், பின்னர் வேறு மொழியில் பயில்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். மாணவர் பயிற்சிக் காலத்தின்போது தாம் ஆரம்பத்தில் தெரிவுசெய்த மொழி மூலத்திலேயே பரீட்சைகள் உட்பட அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும். ஆங்கில மொழி மூலத்தில் கற்கை நெறியை பயில்வதற்கு 30 மாணவ, மாணவிகளே தெரிவுசெய்யப்படுவர்.

**4. விண்ணப்பங்கள் :**

4.1 இவ்விளம்பரத்தின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப, விண்ணப்பங்கள், விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தினால் அல்லது தட்டச்சு செய்யப்பட்டு 8" x 12" (A4 அளவு) அளவுள்ள தாளின் இருபக்கங்களிலும் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தினை தயாரிக்கும்போது அதன் தலைப்பில் பரீட்சையின் பெயரை தமிழுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும். 01 முதல் 10 வரையான விபரங்கள் முதல் பக்கத்தில் அடங்குதல் வேண்டும். 11-14 வரை இரண்டாவது பக்கத்திலும் மிகுதி மூன்றாம் பக்கத்திலும் அடங்குமாறு தயாரிக்கப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப அமையாத விண்ணப்பங்களும், பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதியொன்றை தம் வசம் வைத்திருத்தல் வேண்டும். தாம் பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப அமைந்துள்ளதா என விண்ணப்பதாரி பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும்.

4.2 பரீட்சைக் கட்டணம் ரூபா 400.- விண்ணப்பதாரியினால் ரூபா 400 பெறுமதியான காசுக்கட்டளையொன்றை விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு பேராதனை தபால் நிலையத்தில் மாற்றக்கூடியவாறு பெற்று விண்ணப்பப்படிவத்தில் சரியான இடத்தில் கழன்றுவிடாமல் காசுக்கட்டளையின் விளிம்பை மாத்திரம் பசையால் ஒட்டி விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். மேலும் காசுக்கட்டளையின் நிழற்பிரதியை கைவசம் வைத்துக்கொள்வது பிரயோசனமாகும். எக்காரணத்தைக் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சை கட்டணத்தை வேறு எப்பரீட்சைக்காகவும் மாற்ற முடியாது. இப்பரீட்சை கட்டணத்திற்கான காசுக்கட்டளையை இணைத்து அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

4.3 விண்ணப்பங்கள் 2012, மே மாதம் 31 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியவாறு "பணிப்பாளர், விரிவாக்க, பயிற்சிப் பிரிவு, விவசாயத் திணைக்களம், பேராதனை" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில், அனுப்பப்படல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் பிந்தும் அல்லது காணாமற்போகும் விண்ணப்பங்களிற்கு விவசாயத் திணைக்களம் பொறுப்பேற்காது.

4.4 விண்ணப்பத்தை அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "விவசாயக் கல்லூரிகளுக்கான அனுமதி 2013-2015" என்னும் வாக்கியமும், தெரிவு செய்த முதலாவது, இரண்டாவது பரீட்சை நிலையங்கள் அமைந்துள்ள நகரங்களின் பெயர்களும் தெளிவாக எழுதப்பட்டு இருத்தல் வேண்டும். விண்ணப்பித்த பரீட்சை நிலையங்களை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

**5. பரீட்சை முறைமை :**

5.1 எழுத்துப் பரீட்சைக்கான பாடங்கள் நேரசூசி என்பன கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

| | விடயங்கள் | கால அளவு | நேர சூசி |
|---|---|---|---|
| I. | விவசாயம் - 100 புள்ளிகள் (க. பொ. த. (சா. த.) விவசாய பாடப்பரப்பிற்கு அமைவானதும் விவசாயத் துறையோடு தொடர்பான பொது விடயங்களையும் கொண்டு தயாரிக்கப்பட்ட பல்தேர்வு, சுருக்க வினாக்கள் அடங்கியது). | 1 மணித்தியாலம் | 09.30 மணி - 10.30 மணி |
| II. | விவேகப் பரீட்சை - 100 புள்ளிகள் (ஒழுங்கமைப்பு, தொடர்பு காணல் ஊகித்தல், ஒப்பிடுதல், பகுத்தறிதல் போன்ற திறன்களை மதிப்பிடுவதற்கானது) | 1 மணித்தியாலம் | 11.00 மணி - 12.00 மணி |
| III. | ஆங்கில மொழி - புள்ளிகள் 100 (க. பொ. த. (சாதாரண தரப்) பாடப்பரப்புக்கமைய வினாத்தாள் தயாரிக்கப்படும் ஆங்கில மொழியில் ஒரு விடயத்தை விளங்கிக்கொள்ளல், ஆங்கில மொழி மூலம் தொடர்பாடலுக்கான திறமையையும் ஓரளவு ஆங்கில இலக்கண அறிவையும் பரீட்சிப்பதற்கான பரீட்சையாக இருக்கும். (இவ்வினாத்தாள் ஆங்கில மொழி மூலத்தில் கற்கை நெறியை பயில விரும்பும் மாணவர்களுக்கு மாத்திரமாகும்). | 1 மணித்தியாலம் | 13.30 மணி - 14.30 மணி |

5.2 சிங்களம் அல்லது தமிழ் மொழியில் கற்கை நெறியைப் பயில விரும்பும் விண்ணப்பதாரிகள், கட்டாயமாக, தாம் கற்கை நெறியை தொடருவதற்குத் தெரிவு செய்த மொழி மூலமே முதலாம் இரண்டாம் வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

5.3 ஆங்கில மொழியில் கற்கை நெறியை பயில விரும்பும் விண்ணப்பதாரிகள் தமது விருப்புக்கேற்ப சிங்களம் அல்லது தமிழ் மொழியில் I ஆம், II ஆம் வினாத்தாள்களிற்குத் தோற்ற முடியும். இதற்கேற்ப சகல விண்ணப்பதாரிகளும் எழுத்து மூலப் பரீட்சையின் முதலாம், இரண்டாம் வினாப்பத்திரங்களுக்கு சிங்களம் அல்லது தமிழ் மொழி மூலம் தோற்ற முடியும். ஆங்கில மொழியில் பயில விரும்பும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் ஆங்கில மொழிப் பரீட்சைக்கு கட்டாயமாக தோற்றுதல் வேண்டும்.

5.4 3.1, 3.2 ஆகிய பந்திகளில் குறிப்பிட்டுள்ள தகைமைகளையுடைய சகல விண்ணப்பதாரிகளுக்கும் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்திய அனுமதி அட்டைகளை பரீட்சை நிலையத்தின் பிரதான மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டை பரீட்சைத் திணைக்களத்தினால் அஞ்சல் செய்தவுடன் உடனடியாக பத்திரிகைகளில் பரீட்சைக்கான விளம்பரம் பிரசுரிக்கப்படும். விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட தினத்தின் பின்பு 2 அல்லது 3 நாட்களில் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவிடத்து விளம்பரத்தில் குறிப்பிட்டவாறு பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்கவும். அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவர்கள் தம்மிடம் இருக்கும் விண்ணப்பப்பத்திரத்தினதும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் அத்தாட்சிப்படுத்திய நிழற் பிரதிகள், பதிவுத்தபால் பற்றுச்சீட்டு என்பவற்றுடன் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளவும். கொழும்பிற்கு வெளியில் வசிக்கும் பரீட்சார்த்திகள் தமக்குரிய தொலைநகல் (பக்ஸ்) இலக்கத்தையும் குறிப்பிட்ட உமது வேண்டுகோள் கடிதத்துடன் (அதன் நிழற்பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொண்டு) பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது மிகவும் பொருத்தமானதாகும். அனுமதி அட்டை ஒன்று கிடைக்கப்பெறுவதனால் மாத்திரம் அவர் பரீட்சைக்குத் தகுதியானவர் எனக் கருதப்படமாட்டார்.

5.5 பரீட்சையின்போது மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதன் பொருட்டுப் பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளரினால் வழங்கப்படும் ஆளடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான ஒரு கடவுச்சீட்டு (பாஸ்போட்) ; இது பரீட்சைத் திகதிக்கு முன்னுள்ள மூன்று வருட காலத்தினுள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5.6 இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் நடாத்தப்படும் பொதுப் பரீட்சைகளின் விதிகளையும் ஒழுங்கு முறைகளையும் பரீட்சார்த்திகள் பின்பற்ற வேண்டும். பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்குவிதி முறைகளை மீறும் பரீட்சார்த்திக்கு பரீட்சைத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்படும் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார். பரீட்சைத் திணைக்களம் விண்ணப்பதாரிகள் பெற்ற புள்ளிகள் பற்றிய விபரத்தினை அவர்களுக்கு அனுப்பி வைக்கும். மாவட்ட அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளை பெற்ற விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பரீட்சார்த்தியொருவர் எழுத்துப் பரீட்சைக்கு/நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பினும் அத்தகைய அனுமதி காரணமாக அவர் தகைமையுடையவர் எனக் கருத்திற் கொள்ள முடியாது. ஒரு பரீட்சார்த்தி பரீட்சைக்கு முன்னரோ அல்லது பின்னரோ அல்லது பரீட்சையின் எந்நிலையிலுமோ இப்பிரமாணத்தின்படி தகைமையற்றவர் எனக் கண்டால் அவரின் பரீட்சார்த்தித் தன்மை இரத்துச் செய்யப்படும்.

5.7 எழுத்துப் பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் தோற்றுவதற்கு அரசினால் எந்தவிதப் படிகளும் செலவுகளும் வழங்கப்படமாட்டாது.

**6. தெரிவு செய்யப்படும் முறை :**

6.1 சேர்த்துக்கொள்ளப்படும் வருடத்தில் ஒவ்வொரு மொழி மூலத்திலும் விவசாயக் கல்லூரிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் மொத்த எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு விண்ணப்பதாரிகளைக் கொண்டுள்ள மாவட்டங்களிலிருந்து ஒவ்வொரு மொழி மூலத்திலும் கல்லூரிகளுக்கு அனுமதிக்கப்படும் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். அதன் பின்னர் ஒவ்வொரு மொழி மூலத்திற்குமான அம்மாவட்டத்தின் விண்ணப்பதாரிகளிலிருந்து போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் உயர் திறமை காட்டியுள்ள விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்படுவர். அவ்வாறான தெரிவின்போது கீழ்க்காணும் விடயங்களும் கருத்தில் எடுக்கப்படும்.

6.2 க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய மாவட்டமே அவ்விண்ணப்பதாரியின் மாவட்டமாக கொள்ளப்படும். க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய மாவட்டத்தின் இலக்கத்தை அறிவதற்கு இவ்வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் காணப்படும் இணைப்பு இல. 01 ஐ பார்க்கவும்.

6.3 விவசாயம், விவேகப் பரீட்சை ஆகிய இரு வினாத்தாள்களிலும் பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகையின் அடிப்படையில்கூடிய ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் மாவட்ட அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். க. பொ. த. (உ. த.) உயிரியல் பிரிவில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தி பெற்று போட்டிப் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தவர்கள் முன்னுரிமை அடிப்படையில் முதலில் தெரிவுசெய்யப்படுவர். குறித்த மாவட்டமொன்றில் குறித்த மொழி மூலத்திற்கு அவ்வாறு சித்தியடைந்தவர்கள் இல்லாதவிடத்து அல்லது அவ்வாறான விண்ணப்பதாரிகள் போதியளவு காணப்படாதவிடத்து மாத்திரம் அம்மாவட்டத்திலிருந்து அம்மொழி மூலத்திற்கு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளின் தொகைக்கு பொருந்தும் வகையில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரு பாடத்தில் அல்லது இரு பாடங்களில் சித்தியடைந்த மாவட்டத்தை சேர்ந்த விண்ணப்பதாரிகளில் போட்டிப் பரீட்சையில் மிகத் திறமையாக சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்படுவர். இத்தெரிவு கட்டாயமாக 6.1, 6.2 இல் குறிப்பிட்டபடி மாவட்ட

அடிப்படையில் போட்டிப் பரீட்சையில் திறமை அடிப்படையில் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு முறையில் மேற்கொள்ளப்படும். குறித்த வருடத்தில் ஒவ்வொரு விவசாயக் கல்லூரிக்கும் அனுமதிக்கப்படும் மாணவ, மாணவியர் தொகை, அக்கல்லூரிகளில் ஆண்/பெண் விடுதி வசதிக்கேற்பவும் பயிற்சி வசதிகளுக்கேற்பவும் தீர்மானிக்கப்படும். எனவே மாணவர் தெரிவின்போது போட்டிப் பரீட்சையின் இரண்டு பாடங்களிலும் பெற்ற கூட்டுப் புள்ளிகளின் வெட்டுப்புள்ளி மட்டம் குறித்த மாவட்டத்தில் ஆண், பெண் விண்ணப்பதாரிகளிடையேயும் பாடநெறியை பயிலும் மொழி மூலத்திற்கேற்பவும் வேறுபடும். ஏதாவதொரு மாவட்டமொன்றில் போதியளவு தகுதியுடைய மாணவர் தொகை காணப்படாதவிடத்து குறித்த மொழி மூலத்தில் கல்லூரிகளின் அனுமதியை பூரணப்படுத்துவதற்காக சம எண்ணிக்கையான விண்ணப்பதாரிகள் ஏனைய மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படுவர்.

6.4 இதற்கேற்ப மாவட்டத்தில் போட்டிப் பரீட்சையில் இரு பாடங்களிலும் கூடிய புள்ளிகளைப் பெற்ற குறித்த அளவான விண்ணப்பதாரிகள் அவர்களின் கல்விச் சான்றிதழ்களையும் ஏனைய சான்றிதழ்களையும் பரீட்சிப்பதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப்பரீட்சையின்போது விண்ணப்பதாரிகள் தங்களது சான்றிதழ்களின் மூலப்பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. விவசாயக் கல்லூரிகளுக்குத் தெரிவுசெய்யப்படும் எண்ணிக்கையைவிட அதிகளவான விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

6.5 ஆங்கில மொழிமூலத்தில் பயில விரும்பும் விண்ணப்பதாரிகள் ஆங்கில மொழிப் பரீட்சையில் குறைந்தபட்சம் 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும். ஆங்கில மொழிப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் போதியளவு காணப்படாதவிடத்து மாத்திரம் இச்சித்தி பெறுவதற்கான குறைந்தபட்சப் புள்ளி வீதத்தின் அளவு மாற்றியமைக்கப்படலாம். ஆங்கில மொழியில் பயில்வதற்கு திறமை அடிப்படையிலும், அங்கீகரிக்கப்பட்ட ஒரு முறையிலும் விண்ணப்பதாரிகள் மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். ஆங்கில மொழிப் பரீட்சையில் குறைந்தபட்ச புள்ளிகளைப் பெற்று தகைமைபெறும் விண்ணப்பதாரிகள் முதலாம் இரண்டாம் வினாத்தாள்களில் பெற்ற புள்ளிகளின் கூட்டுத் தொகைக்கேற்ப கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளவர்கள் மாத்திரம் திறமை அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர். ஆங்கில பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையாத விண்ணப்பதாரிகள் அவர்கள் போட்டிப் பரீட்சையில் 1 ஆம் 2 ஆம் வினாத்தாள்களிற்கு உயர் புள்ளிகள் பெற்று சித்தியடைந்திருப்பின், திறமைக்கேற்ப தமது மாவட்ட அடிப்படையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் பயில்வதற்கு சேர்த்துக்கொள்வது தொடர்பில் கவனமெடுக்கப்படும். விண்ணப்பதாரி போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பித்த மொழிமூலத்தை எக்காரணம் கொண்டும் பின்பு மாற்ற முடியாது.

7. **"குசுமா லக்ஸ்மி கருணாதிலக்க" ஞாபகார்த்தப் புலமைப் பரிசில் :**

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் எழுத்துமூல போட்டிப் பரீட்சையில் வினாத்தாள் I, II என்பனவற்றில் அதிகூடிய புள்ளியைப் பெறும் எந்த மொழியிலேனும் பயிற்சியை மேற்கொள்ளும் பெண் விண்ணப்பதாரி ஒருவருக்கு மேற்படி புலமைப் பரிசில் அதன் விதிகளுக்கு அமைய 2 வருட காலத்திற்கு வழங்கப்படும். புலமைப் பரிசிலைப் பெற்றவருக்கு குண்டசாலை விவசாயக் கல்லூரியில் பயில சந்தர்ப்பம் வழங்கப்படும். இப்புலமைப் பரிசின் வருடாந்தப் பெறுமதி ரூபா 10,000 ஆகும்.

கே. என். மான்கோட்டே,
விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

விவசாயத் திணைக்களம்,
பேராதனை,
2012.03.30.

***இணைப்பு இல. - 01***

**மாவட்டத்தின் பெயர்களும் அவற்றின் இலக்கமும்**

(6.2 பந்திக்கு ஏற்புடையதாகும்)

| மாவட்ட இல. | மாவட்டம் | மாவட்ட இல. | மாவட்டம் |
|---|---|---|---|
| 01 | அநுராதபுரம் | 14 | கம்பஹா |
| 02 | பதுளை | 15 | களுத்துறை |
| 03 | மட்டக்களப்பு | 16 | மாத்தளை |
| 04 | கொழும்பு | 17 | நுவரெலியா |
| 05 | காலி | 18 | மன்னார் |
| 06 | யாழ்ப்பாணம் | 19 | முல்லைத்தீவு |
| 07 | கண்டி | 20 | அம்பாறை |
| 08 | குருநாகல் | 21 | புத்தளம் |
| 09 | மாத்தறை | 22 | பொலன்னறுவை |
| 10 | திருகோணமலை | 23 | மொனராகலை |
| 11 | வவுனியா | 24 | கேகாலை |
| 12 | இரத்தினபுரி | 25 | கிளிநொச்சி |
| 13 | ஹம்பாந்தோட்டை | | |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை விவசாயக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கான போட்டிப்பரீட்சை - 2012**

*விவசாய டிப்ளோமா பாடநெறி - (2013/2015)*

**(Competitive Examination for Admission to Sri Lanka School of Agriculture – 2012**
**Diploma in Agriculture - (2013/ 2015)**

[ ]

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. பரீட்சைக்குத் தோற்றும் நிலையம் அமைந்துள்ள நகரம் :
1 ஆம் தெரிவு ................................
2 ஆம் தெரிவு ................................

அப்பரீட்சை நிலைய இலக்கம்
..........................
..........................

(வர்த்தமானி அறிவித்தலின் முதலாவது பந்திக்கு அமைய)

2. பரீட்சைக்குத் தோற்றும் மொழி :
சிங்களம் - 2
தமிழ் - 3

[ ........................ ]

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3. பாடநெறியை பயிலுவதற்கு விரும்பும் மொழி :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

[ ................... ]

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

4. பால்

| | |
|---|---|
| ஆண் | 0 |
| பெண் | 1 |

[ ]

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

5. க.பொ.த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் :
......................

மாவட்ட இலக்கம் :
...........

(6.2 பந்திக்கு ஏற்ப இணைப்பு 1 ஐ பார்க்க)

6. க.பொ.த. (உ.த.) உயிரியற் பிரிவில் தோற்றி சித்தி பெற்றுள்ள பாடங்களின் எண்ணிக்கை
03 பாடங்கள் ஓர் அமர்வில் - 3
02 அல்லது 01 பாடம் ஓர் அமர்வில் - 2

(3.1 பந்திக்கு ஏற்ப)

சித்தியடைந்த பாடங்களுக்கேற்ப உரிய இலக்கம்
.............................

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

7. (அ) (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு) :-----.
(தெளிவான எழுத்தில்)

(ii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில் Capital எழுத்தில் முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு) : ----.
(உதாரணம் : ANANDA, K. C. B.)

(ஆ) (i) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :-----.

(ii) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கில Capital எழுத்தில்) : ----.

8. (i) முழுமையான முகவரி :-----.

(ii) பரீட்சை அனுமதிப்பத்திரத்தினை அனுப்ப வேண்டிய முகவரி :----. (5.1 பந்திக்கு ஏற்ப இணைப்பு 1 ஐப் பார்க்கவும்)
(ஆங்கில Capital எழுத்தில்) :-

தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் இருப்பின் :----.

9. (அ) க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதன் முறையாக தோற்றிய பாடசாலையும் முகவரியும் :----.

(ஆ) க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் (தமிழில்) :----.

(இ) க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் (ஆங்கிலத்தில்) :----.

10. தேசிய அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐

11. (அ) தற்போது வதியும் தேர்தற்தொகுதி (தமிழில்) :-----.

(ஆ) தற்போது வதியும் தேர்தற் தொகுதி (ஆங்கிலத்தில்) :-----.

12. பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

13. 2012.05.31 ஆந் திகதி அன்று வயது : வருடங்கள் ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

14. இப்பகுதியை பூரணப்படுத்தமுன் வர்த்தமான அறிவித்தலை கவனமாக வாசித்தல் வேண்டும்.

(அ) இந்த அறிவித்தலின் 3.1 ஆம் பந்திக்கு ஏற்ப க. பொ. த. (சா. த.) பரீட்சையில் விண்ணப்பதாரி சித்தியடைந்த ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்கள் :

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | 1. தமிழ்மொழி<br>2. கணிதம்<br>3. விஞ்ஞானம்<br>4. விவசாயம்<br>5. சமூகக்கல்வி<br>6.<br>7.<br>8.<br>9.<br>10. | | |

(ஆ) வர்த்தமானி அறிவித்தலின் 3.1 பந்திக்கு அமைய கட்டாயம் திறமைச் சித்தி பெறவேண்டிய நான்கு பாடங்கள் தொடர்பான விபரங்கள் :

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | 1. தமிழ்மொழி<br>2. கணிதம்<br>3. விஞ்ஞானம்<br>4. விவசாயம்<br>5. சமூகக்கல்வி | | |

(இ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியற் பிரிவில் தோற்றினீரா? ஆம்/இல்லை (தேவையற்ற சொல்லை கீறிவிடவும்)

(ஈ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்கள் :

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | 1. உயிரியல்<br>2. விவசாயம்<br>3. பௌதீகவியல்<br>4. இரசாயனவியல்<br>5. விலங்கியல்<br>6. தாவரவியல் | | |

(உ) மேலேயுள்ள தகைமைகளை உறுதிப்படுத்த சான்றிதழின் நிழற் பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பவும். (மூலப்பிரதியை அனுப்பத் தேவையில்லை)

சான்றிதழ்களின் நிழற் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளனவா ? :-----.

15. (i) பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயரும் முகவரியும் :-----.
(ii) பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயரும் முகவரியும் :-----.
(ஆங்கிலத்தில் Capital எழுத்தில்)

16. பணம் செலுத்திய காசுக்கட்டளையின் விபரங்கள் :

16.1 காசுக்கட்டளை இலக்கம் :-----.
16.2 விநியோகிக்கப்பட்ட தபால் நிலையம் :-----.
16.3 காசுக்கட்டளையை மாற்றக்கூடிய தபால் நிலையம் :----.
(இது கட்டாயம் பேராதனை தபால் நிலையமாக இருத்தல் வேண்டும்)

காசுக்கட்டளையின் மேல் விளிம்பை மாத்திரம் இங்கு பசையால் ஒட்டுதல் வேண்டும். காசுக்கட்டளையின் நிழற்பிரதியொன்றை கட்டாயமாக தம் வசம் வைத்துக்கொள்ளவும்.

**பரீட்சார்த்தியின் உறுதியுரை** :

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் உறுதியுரைக்கின்றேன். க. பொ. த. (சாதாரண) தரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாகவும் தமிழ், விஞ்ஞானம், கணிதம் என்பவற்றிற்கு திறமைச் சித்தியும் விவசாயம் அல்லது சமூகக்கல்வி இரண்டில் ஒன்றிற்கு திறமைச் சித்தியும் உயர்தரத்தில் உயிரியற் பிரிவில் பயின்று வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட தகைமைகளை பெற்றுள்ளேன் என உறுதியளிக்கிறேன். இதிலடங்கிய விபரங்களில் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படுமிடத்து நான் தகைமை இழப்பேன் என்பதையும் அறிவேன். பரீட்சை தொடர்பான பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு அமைவாக நடக்க நான் சம்மதிக்கிறேன்.

-----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**கல்வித் தகைமைகளையும் கையொப்பத்தையும் உறுதிப்படுத்தல்**

(திணைக்களத் தலைவர் ஒருவரால், பாடசாலை அதிபர் ஒருவரால், சமாதான நீதவானால், சட்டத்தரணியால் அல்லது வருடத்திற்கு திரட்டிய சம்பளமாக ரூபா 2,30,060 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.)

மேலே கையொப்பம் இட்ட திரு./திருமதி/செல்வி ............................................... என்பவரை நான் நன்றாக அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டாரென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். மேலும் வர்த்தமானி அறிவித்தலில்

குறிப்பிடப்பட்டுள்ள க.பொ.த.(சா.த.), க.பொ.த.(உ.த.) தகைமைகளை பெற்றுள்ளார் என வர்த்தமானி அறிவித்தலையும் கல்விச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை பரீட்சித்து அத்தாட்சிப்படுத்துகிறேன். மேலும் உரிய பரீட்சை கட்டணங்களை செலுத்தியுள்ளார் என்பதையும் அதற்கான பற்றுச்சீட்டை உரிய இடத்தில் ஒட்டியுள்ளார் என்பதையும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

*4-608*

---

### *கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்*

*இலங்கை கணக்காய்வு சேவையின் வகுப்பு II தரம் II இல் கணக்காய்வு அத்தியட்சகர்களைச் சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012*

இலங்கை கணக்காய்வு சேவையின் வகுப்பு II தரம் II இல் கணக்காய்வு அத்தியட்சகர் பதவிகளுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவுசெய்வதற்காக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் பரீட்சை நடாத்தப்படுவதுடன் இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பரீட்சைத் திகதி.**- இப்பரீட்சையானது, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் 2012, யூலை மாதம் கொழும்பில் நடாத்தப்படும். பரீட்சையைப் பிற்போடுவதற்கான அல்லது இரத்துச்செய்வதற்கான அதிகாரம் பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு உண்டு.

2. **நியமிக்கப்படவுள்ள நபர்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்குவரும் திகதி.**- இது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நிச்சயிக்கப்படும். வெற்றிடங்கள் எதனையும் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாமல் விடுவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

3. **சேவை நிபந்தனைகள்.**- (i) சாதாரண வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இல் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அரசாங்க சேவை நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் 1989, திசெம்பர் 11 ஆந் திகதிய 588/5 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தொடர்பான சேவைப் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அந்த பிரமாணங்களுக்குச் செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் செய்யப்படும் திருத்தங் களுக்கும் அமைய தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் இலங்கை கணக்காய்வு சேவையின் வகுப்பு II தரம் II இற்கு நியமிக்கப்படுவார்கள்.

(ii) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புக்கள் செலுத்தப்படுதல் வேண்டும்.

(iii) தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தி நியமனத் திகதியில் இருந்து மூன்றாண்டு தகுதிகாண் காலப்பகுதிக்கு அமைய நியமிக்கப்படுவார். அரசாங்க/மாகாண பொதுச்சேவையின் நிரந்தர பதவியில் தற்பொழுது நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஓர் உத்தியோகத்தர் தெரிவுசெய்யப்பட்டால் புதிய நியமனம் ஓராண்டு காலம் பதில் கடமையாற்றுவதற்கு உட்பட்டதாகும்.

(iv) இந்த அறிவிப்பின் 6(ஆ)(1) முதல் (8) வரையிலான பந்திகளின்கீழ் பரீட்சைக்குத் தோற்றி சித்தியெய்துபவர்களின் தகுதிகாண்/பதில் கடமையாற்றும் காலப்பகுதியின் முடிவில் பதவிகளில் நிரந்தரமாக்கப்படுதல் ஏனைய காரணிகளுக்கு மத்தியில் பின்வரும் காரணிகளில் தங்கியுள்ளது :-

(அ) கடமை மற்றும் உத்தியோக ரீதியான நடத்தை திருப்தியாக இருத்தல்.

(ஆ) தகுதிகாண்/பதில் கடமைக் காலப்பகுதி முடிவுறும் முன்னர் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல்.

(v) இந்த அறிவித்தலின் 6(ஆ) (9) இல் இருந்து (12) வரையிலான பந்திகளின்கீழ் இப்பரீட்சையில் சித்திபெறுபவர்களை நிரந்தரமாக்க லுக்காக மேற்குறித்த முதலாவது வினைத் திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் அவசியமற்றதாகும். அவர்கள் பதவியில் நிரந்தரமாக்கப்படுவது அவர்களுடைய திருப்திகரமான வேலையையும் உத்தியோக ரீதியான நடத்தையையும் பொறுத்தே இருக்கும்.

(vi) தகுதிகாண் / பதில் கடமைக்காலப் பகுதியின் இறுதியில் நிரந்தரமாக்கப்படத் தவறும் பட்சத்தில் :

(அ) தற்பொழுது அரசாங்க/மாகாண அரச சேவையில் பதவி வகிக்கின்ற உத்தியோகத்தர்கள் எனில் அவர்கள் ஏற்கனவே கடமையாற்றிய பதவிக்கு மீள அனுப்பிவைக்கப்படுவதுடன்,

(ஆ) ஏனையவர்களின் விடயத்தில் அவர்களின் சேவைகள் முடிவுறுத்தப்படும்.

4. **அமைப்பும் சம்பள அளவுத்திட்டமும்.**- வகுப்பு II தரம் II இற்கான (கணக்காய்வு அத்தியட்சகர்) மாதாந்த சம்பள அளவுத்திட்டமானது ரூபா 22,935-16X645-ரூபா 33,255 ஆகும். (ரூபா 24,870 மற்றும் ரூபா 26,805 இற்கு முன்னர் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகள்)

5. **உடல் நலமும் ஒழுக்கமும்**.- பரீட்சார்த்தி தேக ஆரோக்கியம் உடையவர் எனவும் சிறந்த ஒழுக்கமுடையவர் எனவும் அரசாங்க சேவை ஆணைக்குழு திருப்தியடைய வேண்டும். அவர் சிறந்த உடல் வலிமை உடையவராகவும், நல்ல கண் பார்வை உடையவராகவும் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கேற்ற தேக ஆரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். தற்பொழுது அரசாங்க சேவையில்/ மாகாண அரச சேவையில் இல்லாத ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் மருத்துவ பரிசோதனையொன்றுக்கு உட்படுத்தப்படுவார்.

6. **தகைமைகள்**.- எல்லா பரீட்சார்த்திகளும்-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) பின்வரும் தகைமைகளில் ஏதேனும் ஒன்றை உடையவராக இருத்தல் வேண்டும் :-

(1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்ட பட்டம்.

(2) பட்டயம் பெற்ற செயலாளர்கள் நிறுவகத்தின் இணை அங்கத்துவம்

(3) கூட்டிணைந்த செயலாளர் நிறுவகத்தின் இணை அங்கத்துவம்

(4) பொது நிதி மற்றும் வரி அல்லது அதற்கு சமமான துறையில் விஞ்ஞானமானிப் பட்டம்

(5) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இடைநிலை அல்லது தொழில்சார் அனுமதி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது பின்வரும் தொழில்சார் கணக்காளர் நிறுவனம் ஒன்றிலிருந்து அதற்குச் சமமான மட்டத்திலான தகைமையை பெற்றிருத்தல் வேண்டும் :-

(அ) இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் இல் உள்ள பட்டயக் கணக்காளர் நிறுவகம்

(ஆ) ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவகம்

(இ) ஐக்கிய இராச்சியத்தின் சான்றுபடுத்தப்பட்ட பட்டயக் கணக்காளர்களின் சங்கம் அல்லது அதற்குச் சமமான தொழில்சார் நிறுவனம்

(6) ஐக்கிய இராச்சியத்தின் கிரய மற்றும் கைத்தொழில் கணக்காளர் சங்கத்தின் இணை அங்கத்துவம்

(7) உயர் கல்வி அமைச்சின் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா

(8) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் வர்த்தக டிப்ளோமா

(9) மாதமொன்றுக்கு ரூபா 13,640 இற்குக் குறையாத ஆரம்ப சம்பளத்தினைக் கொண்ட சம்பள அளவுத்திட்டத்திற்குரிய திணைக்களத் தரத்தில் அல்லது இணைந்த சேவையொன்றில் பதவி வகித்துவருகின்ற விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியன்று அரசாங்க/மாகாண அரச சேவையில் 10 வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றி சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர்

(10) விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று 5 ஆண்டுகள் சேவைக்காலத்துடன் அரசாங்க/ மாகாண சேவையில் அல்லது அரசாங்க தொழில் முயற்சியொன்றில் தனது பதவி நிரந்தரமாக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டமொன்றை பெற்ற உத்தியோகத்தர் ஒருவர்

(11) விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதயில் 5 ஆண்டுகள் சேவைக் காலத்துடன் அரசாங்க/ மாகாண பொதுச் சேவையில் அல்லது அரசாங்க தொழல் முயற்சியொன்றில் தமது பதவி நிரந்தரமாக்கப்பட்ட உயர் கல்வி அமைச்சின் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா இடைநிலை சித்தியெய்திய உத்தியோகத்தர் ஒருவர்

(12) மாதாந்தம் ரூபா 14,980 இற்கு குறையாத ஆரம்ப சம்பளத்துடனான சம்பள அளவுத்திட்டத்தினைச் சார்ந்த அரசாங்க தொழில் முயற்சியொன்றின் பதவியால் சேவையாற்றி வருகின்ற விண்ணப்பத் தினைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று 10 ஆண்டுகள் தொடர்ச்சியாக சேவையாற்றி பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட உத்தியோகத்தர்

(இ) 2012, மே 28 அன்று 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்பொழுது அரசாங்க/மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு இந்த வயதெல்லை ஏற்புடையதாகாது.

**குறிப்பு**.- (i) சித்தியெய்துவதற்கு அவசியமான பரீட்சை அல்லது பரீட்சைகளில் 2012, மே 28 ஆந் திகதி அனைத்து அம்சங்களையும் வெற்றிகரமாகப் பூரணப்படுத்தியிருந்தால், அத்துடன்

(ii) தகைமைகளுக்கு ஆதாரமாக உத்தியோகபூர்வ சான்றிதழை அல்லது அத்தகைய சான்றிதழுக்குப் பதிலாக பொதுச்சேவை ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளக்கூடிய உத்தியோகபூர்வ ஆவணம் ஒன்றை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தால் மட்டுமே பரீட்சார்த்தி தகைமை உடையவராகக் கருதப்படுவார்.

7. **பரீட்சைக் கட்டணம்**.- இப்பரீட்சைக்கான கட்டணம் ரூபா 500 ஆகும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமான தலைப்பு 2003-02-13 இற்கு செலவு வைக்கப்படுவதற்கான அறிவுறுத்தலுடன் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும். இறுதித் தினத்திற்கு முன்னர் அண்மையிலுள்ள பிரதேச செயலகம் அல்லது மாவட்ட செயலகத்தில் செலுத்தப்பட வேண்டும். அந்த அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட பற்றுச்சீட்டு தமது விண்ணப்பப்படிவத்தில் ஒட்டப்படல் வேண்டும். இப்பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் முற்றாகவோ அல்லது பகுதியளவிலோ மீளச் செலுத்தப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் போட்டோ பிரதியினை தன்வசம் வைத்துக்கொள்வது பின்னர் பயனளிக்கக்கூடியதாகும்.

8. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பமானது இந்த அறிவிப்புடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரிப்படிவத்திற்கு ஏற்ப ஏ4

அளவுடைய கடதாசியின் இரு பக்கங்களையும் உபயோகித்து 1 முதல் 5 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும் மிகுதி அடுத்த பக்கத்திலும் தயாரிக்கப்பட்டு விண்ணப்பதாரராலேயே நிரப்பப்படுதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பப்படிவமானது, விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைபெற்றுள்ள மொழியிலேயே நிரப்பப்படுதல் வேண்டும். (12 ஆம் பந்தியைப் பார்க்கவும்.)

(இ) திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவமானது "பரீட்சை ஆணையாளர் நாயகம், தாபனங்கள் மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்னும் முகவரிக்கு பரீடசைகள் ஆணையாளர் நாயகத்துக்கு 2012, மே 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணபத்தைக் கொண்டுள்ள கடித உறையின் மேற்பக்க இடதுமூலையில் "திறந்த போட்டிப் பரீட்சை கணக்காய்வு அத்தியட்சகர் - 2012" என்ற வாசகங்கள் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் பொறுப்பேற் கப்பட மாட்டாது. அரசாங்க சேவையில்/மாகாண அரச சேவையில்/ அரசாங்க கூட்டுத்தாபன சேவையின் கடமையாற்றும் விண்ணப்ப தாரிகள் தமது விண்ணபங்களை தமது திணைக்களங்களின் தலைவர்கள்/நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

(ஈ) அனைத்து அம்சங்களையும் பூரணப்படுத்தாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் அனுப்பும்போது காணாமற்போதல் அல்லது தாமதமடைதல் குறித்து மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

(உ) விண்ணப்பம் கிடைக்கப்பெற்றது பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு "அனுமதி அட்டைகள்" வழங்கப்பட்ட உடன் செய்திப் பத்திரிகைகளில் அதுபற்றி அறிவித்தல் கொடுக்கப்படும். இந்த அனுமதி அட்டையை பரீட்சைத் திகதிக்கு ஏழு நாட்களுக் முன்னர் பெற்றுக் கொள்ளாத விண்ணப்பதாரர் ஒருவர் பின்வரும் விபரங்களுடன் தாபனங்கள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும். (பெக்ஸ் செய்திகளுக்காக இல. 011-2784232) :-

(i) பரீட்சையின் பெயர் :----.
(ii) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :----.
(iii) முகவரி :----.
(iv) விண்ணப்பம் தபாலில் அனுப்பப்பட்ட திகதி, பதிவு இலக்கம் மற்றும் தபால் அலுவலகம் :----.

(ஊ) கையொப்பங்களை சான்றுபடுத்துவதற்கு அதிகாரமளிக் கப்பட்ட நபரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் சான்று படுத்தப்படல் வேண்டும். தற்பொழுது அரசாங்க/மாகாண அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது கையொப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர்களால் அல்லது அவர் சார்பில் அவ்வாறு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலகர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகளின் கையொப்பம் சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் அல்லது பணிப்பாளரால் முகாமை செய்யப்படும் பாடசாலையின் அதிபர், ரூபா 19,755 அல்லது அதற்கு மேற்பட்ட அடிப்படை மாதச் சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர், பௌத்த விஹாரையின் விஹாராதிபதி அல்லது சங்கைக்குரிய பிரதம குரு, ஏனைய வேறு மதத்தைச் சார்ந்த அல்லது வணக்க ஸ்தலங்களில் முக்கிய பதவி வகிக்கும் மதகுரு, முப்படைகளின் கட்டளைத் தளபதி, பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவி வகிக்கும் அலுவலகர் ஆகியோரில் எவரினாலும் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

9. **பரீட்சைக்கு அனுமதித்தல்**.- (அ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற அனைவருக்கும் அனுமதி அட்டைகளை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் வழங்குவார். பரீட்சைக்குத் தோற்றுகின்ற பரீட்சார்த்தி தமது கையொப்பம் சான்றுபடுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறுகின்ற பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்.

(ஆ) பரீட்சார்த்தி தமக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சை எழுதுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து பரீட்சார்த்திகளும் பரீட்சை நடைபெறும் முதல் நாளன்றே தமது அனுமதி அட்டையை மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். அனைத்து பரீட்சார்த்திகளாலும் கடைப்பிடிக்கவேண்டிய விதிக்கோவையொன்று இந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(இ) பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைக் கொண்டுள்ளமை ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதலாகாது.

(ஈ) பரீட்சைகளை நடாத்துவது சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டங்கள், விதிகளுக்கு பரீட்சார்த்திகள் இணங்கி நடப்பதற்கு பணிக்கப்படுகின்றனர். இவ்விதிகளை மீறுகின்ற பரீட்சார்த்தி பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாகுவார்.

10. **பரீட்சார்த்தியின் அடையாளம்**.- பரீட்சார்த்தி ஒருவர் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும், பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தமது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இந்த நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

(ஆ) குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட பரீட்சைத் திகதிக்கு மூன்றாண்டுகளுக்கு மேற்படாத கடவுச்சீட்டு

11. **பொய்யான தகவல்கள் வழங்குதல்**.- பரீட்சார்த்தி தகைமை யற்றவர் எனக் காணப்பட்டால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் தேவையான சந்தர்ப்பத்தில் அவருடைய பரீட்சார்த்தி என்ற தன்மை இரத்துச் செய்யப்படும். பரீட்சார்த்தியால் வழங்கப்பட்ட விபரங்கள் அவர் அதனை பிழையானவை எனத் தெரிந்துகொண்டே சமர்ப்பித்துள்ளார் என நிரூபிக்கப்பட்டால் இல்லாவிடின் அவர் ஏதும் முக்கிய விடயமொன்றை வேண்டுமென்றே மறைத்துவிட்டார் எனக் காணப்பட்டால், அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

*12.* **பரீட்சைத் திட்டம்**.- பரீட்சை எழுதும் மொழி.- (அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி அவர் பரீட்சையில் சித்தியடைவதற்குத் தகைமைபெற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

(இ) பரீட்சார்த்தி தகைமைபெற்ற பரீட்சைக்கான பாடங்கள் இரண்டு மொழிகளில் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையான மொழிகளில் சித்தியடைந்திருந்தால் அப்பரீட்சையில் அவர் சித்தியடைந்த அதிக எண்ணிக்கையான பாடங்களுக்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியில் எழுதுதல் வேண்டும்.

(ஈ) சிறப்புப் பட்டம் பெற்ற பரீட்சார்த்தி பிரதான பாடத்தை ஒரு மொழியிலும், துணைப் பாடத்தை இன்னொரு மொழியிலும் சித்தி அடைந்திருந்தால், அவர் பிரதான பாடத்தை சித்தியடைந்த மொழியில் அல்லது அரச கரும மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு**.- (i) மேலே (ஆ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்ட "தகைமைபெற்ற பரீட்சை" என்ற சொற்றொடர் கருதுவதாவது 6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீடசைகளில் ஒன்றாகும்.

(ii) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் எல்லா வினாத்தாள் களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்.

(iii) பரீட்சார்த்தி தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை மொழியை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

*13.* **பரீட்சை நடைமுறை**.- (அ) பின்வரும் ஆறு பாடங்களுக்காக மூன்று மணித்தியால எழுத்துமூல வினாத்தாள்களைக் கொண்ட பரீட்சையும் நேர்முகப் பரீட்சையும் நடைபெறும் :

(1) கணக்கியல்
(2) கணக்காய்வு
(3) வணிகக் கணிதம்
(4) கிரயக் கணக்கியல்
(5) பொருளாதாரமும் அரசாங்க நிதியியலும்
(6) பொது வர்த்தக அறிவும் வர்த்தக எண்கணிதமும்
அல்லது
(7) அரசாங்க நிதிப்பிரமாணமும் நிதி நடைமுறைகளும் :

**குறிப்பு**.- பாடத்திட்டம் பின்னிணைப்பு "அ" இல் தரப்பட் டுள்ளது.

(ஆ) எழுத்துமூல பரீட்சைக்காக ஒவ்வொரு வினாத்தாளிலும் ஆகக்குறைந்தது 40 புள்ளிகளைப் பெறுகின்ற அத்துடன் முழு பரீட்சைக்குமாக சராசரியாக ஆகக்குறைந்தது 45 சதவீத புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளில் கூடிய மொத்த புள்ளிகளைப் பெறுபவர்களிலிருந்து வெற்றிடமாகவுள்ள எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையானவர்கள் மாத்திரம் இரண்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்குத் தகைமையுடையவராவார். எல்லா பரீட்சார்த்தி களினதும் தகைமைகள், சான்றிதழ்களைப் பரிசோதனை செய்வதற்கு மற்றும் தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் சம்பந்தமாக அவர்களுடைய சேவைப் பதிவேடுகளைப் பரீட்சிப்பதற்கு மாத்திரமே நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

*14.* **நியமனம் செய்வதற்காக தெரிவுசெய்யும் முறைமை**.- எழுத்துமூல பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு மத்தியில் வெற்றிட எண்ணிக்கையின் அடிப்படையில் தேர்ந்தெடுக் கப்படுவர். ஒரே புள்ளியினை பல பரீட்சார்த்திகள் பெற்றிருக்கும் பட்சத்தில் தெரிவிற்கான இறுதித் தீர்மானம் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் எடுக்கப்படும். அனைத்து வெற்றிடங்களையும் அல்லது அதில் ஒரு பகுதியினை மாத்திரம் நிரப்புவதற்கு/ நிரப்பாது விடுவதற்குரிய தீர்மானம் பொதுச்சேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

*15.* மேலே தரப்பட்டுள்ள பிரமாணங்களால் உள்ளடக்கப்படாத விடயங்கள் இருப்பின் அவை பொதுச்சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச். ஏ. எஸ். சமரவீர,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி,

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
இல. 306/72, பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை,
2012, ஏப்பிறல் 10.

பின்னிணைப்பு - அ

**இலங்கை கணக்காய்வு சேவையின் வகுப்பு II தரம் II இற்கு நியமனம் செய்வதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை தொடர்பான விபரங்கள்**

பந்தி இல. 13

விண்ணப்பதாரிகள், பின்வருமாறு ஒவ்வொன்றும் 3 மணித்தியாலங்கள் கொண்ட ஆறு (6) வினாத்தாள்களுக்கு தோற்ற வேண்டும் :-

பரீட்சை நடைமுறை.- பரீட்சை நடைமுறை கீழே காண்பிக்கப்பட்டுள் ளது :

எழுத்துமூல பரீட்சை

| | புள்ளிகள் |
|---|---|
| வினாப்பத்திரம் (1) - கணக்கியல் | 100 |
| வினாப்பத்திரம் (2) - கணக்காய்வு | 100 |
| வினாப்பத்திரம் (3) - வணிகக் கணிதம் | 100 |
| வினாப்பத்திரம் (4) - கிரயக் கணக்கியல் | 100 |
| வினாப்பத்திரம் (5) - பொருளாதாரமும் அரசாங்க நிதியியலும் | 100 |
| வினாப்பத்திரம் (6) - பொது வர்த்தக அறிவும் வர்த்தக எண்கணிதமும் அல்லது | 100 |
| வினாப்பத்திரம் (7) - அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும் நிதி நடைமுறையும் | 100 |

**குறிப்பு**.- "(1)-(5) வரையான வினாப்பத்திரங்களுக்கு மேலதிகமாக இவ்அறிவித்தலின் 6(ஆ) இல் (1) முதல் (8) வரையான பந்திகளின்கீழ் தகைமைபெறும் விண்ணப்பதாரிகள் (6) ஆவது வினாப்பத்திரங்களுக்கு விடையளிக்க வேண்டியதுடன் 6(ஆ) இல் (9) முதல் (12) வரையான பந்திகளின்கீழ் தகைமை பெறும் விண்ணப்பதாரிகள் (7) ஆம் வினாப்பத்திரத்திற்கு விடையளிக்க வேண்டும்.

**எழுத்துப் பரீட்சைக்கான பாடவிதானம் :**

(1) *கணக்கியல்.-* கீழுள்ள தலைப்புக்களில் 3 மணித்தியால வினாத்தாள் (சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்) - 100 புள்ளிகள்

*கணக்கியல் தத்துவங்கள் :*

உற்பத்திக் கணக்குகள், வியாபாரக் கணக்குகள்
இலாப நட்டக் கணக்குகள், ஐந்தொகைகள்
தொங்கற் கணக்குகளும், பிழைகளைச் சீராக்கல் செய்வதும்
ஒற்றைப் பதிவும், பூர்த்தியாக்கப்படாத பதிவேடுகளும்
கட்டுப்பாட்டுக் கணக்குகள்
இருப்பு மதிப்பீடு
பெறுவனவு கொடுப்பனவுக் கணக்குகள், வருமான செலவினக் கணக்குகள்
அட்டுறு அடிப்படையிலான கணக்கீடு
மூலதன, வருமான செலவினங்கள்
தேய்மானமும் காலத் தேய்மானமும் அருகுதலும்
பங்குடைமை கணக்கீடு
ஏற்பாடுகளும் ஒதுக்கீடுகளும்
கூட்டு முயற்சிகள்
நாணயமாற்று உண்டியல்கள்
வரையறுக்கப்பட்ட கம்பனிகள்
அரச கூட்டுத்தாபனக் கணக்குகள்
ஒப்படைக் கணக்குகள்
விற்பனை இன்றேல் திரும்பல் பொருட்கள்
கொள்கலன் கணக்குகள்
கிளைக் கணக்குகள்
திணைக்களக் கணக்குகள்
வாடகைக் கொள்வனவுக் கணக்குகள்
முதலீட்டுக் கணக்குகள்
இறைக் கணக்குகள்

(2) *கணக்காய்வு.-* கீழுள்ள தலைப்புக்களில் 3 மணித்தியால வினாத்தாள் (சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்) - 100 புள்ளிகள்

**கணக்காய்வு தொடர்பான பொது தத்துவங்களும் கோட்பாடுகளும் :**

*கணக்காய்வு வகைகள்.-* உள்ளகக் கணக்காய்வு, புறக் கணக்காய்வு, நியதிக் கணக்காய்வு, தனியார் கணக்காய்வு, ஐந்தொகைக் கணக்காய்வு, இடைக்காலக் கணக்காய்வு, இறுதிக் கணக்காய்வு, அரசாங்க கணக்காய்வு, தனியார் தொழில் முயற்சிகளின் கணக்காய்வு என்பன.

*உள்ளக மற்றும் புற கணக்காய்வாளர்களின் கடமைகள்.-* அவர்களின் தொடர்புகள், அவர்களின் பண்புகள் சுதந்திரம்

*அகக்கட்டுப்பாடும் செவ்வையும்.-* அகக்கட்டுப்பாட்டு முறைமைகளை மீளாய்வு செய்தல், பதிவுசெய்தல், தொடக்க மதிப்பிடுதலும் உறுதிப்படுத்துதலும் இறுதி மதிப்பிடுதலும், பகுப்பாய்வு கணக்காய்வு, அமைப்பு வரைபடங்களும் பாய்வுப் பட்டிகளும் ஆழக் கணக்காய்வும்.

*சான்றுறுதிப்படுத்தல்.-* மூலதன, வருமான செலவுகளை வகைப்படுத்தல், மாதிரி தெரிவுக்கான முறைமைகளும் உத்தி முறைகளும் மோசடி, பிழைகளைக் கண்டுபிடித்தலும் தடுத்தலும்.

*விற்பனைக் கணக்காய்வு.-* வருமதியாளரினதும், பெறுவனவுகளினதும் நடைமுறை, கடன் கொள்வனவுகளினதும் கொடுப்பனவுகளினதும் நடைமுறை, சம்பளப் பட்டியல் நடைமுறை, கிரயமும் பொருட் பதிவேடுகளும் கணக்கு ஏடுகளும் இடைநிலை மற்றும் இறுதி கணக்குகளும்.

*சொத்துக்களையும் பொறுப்புக்களையும் செவ்வை பார்த்தல்.-* நிலையான சொத்துக்கள், முதலீடு, இருப்பு கடன்பட்டோர், பணம், பொறுப்புக்கள், நிகழ்த்தக்க பொறுப்புக்கள், நிகழத்தக்க பொறுப்புக்கள் முதலியவை தொடர்பான உரிமை உள்ளமை, மதிப்பீடு என்பன.

*வரையறுக்கப்பட்ட கம்பனிகள்.-* வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் நியதி ஏடுகள், பணிப்பாளர்களின் அதிகாரங்களும் கடமைகளும், வகுத்தீட்டுக்குரிய இலாபம்.

*அரசாங்க கூட்டுத்தாபனங்கள்.-* கணக்காய்வாளரின் நியமனமும், ஊதியமும், நீக்கமும் புதுக்கணக்காய்வை ஒப்புக்கொள்ள முன்பாக நடவடிக்கை

*கணக்காளரின் அதிகாரங்களும், கடமைகளும், கணக்காய்வாளரின் பொறுப்பும்.-* அக/புற கணக்காய்வுகளின் அமைப்பும் கட்டுப்பாடுகளும், கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்கள், அகக் கட்டுப்பாட்டு வினாக் கொத்துக்கள் அட்டவணைகள்.

*இயந்திரமயப்படுத்தப்பட்ட முறைமையின் கணக்காய்வு.-* அகக் கணக்காய்வு, செயலாற்றல் கணக்காய்வு, முகாமைக் கணக்காய்வு, தொழிற்பாட்டு கணக்காய்வு, முறைமைக் கணக்காய்வு, பணப்பெறுமதி கணக்காய்வு, புலனாய்வுகள்.

(3) *வணிகக் கணிதம்.-* பின்வரும் தலைப்புக்களில் 3 மணித்தியால வினாத்தாள் (சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்) - (புள்ளிகள் 100)

*தொடர்கள்.-* கூட்டல் விருத்தி, பெருக்கல் விருத்தி ஈருறுப்ப மாறியும், சார்பற்ற மாறியும், கூட்டுவட்டியும், கழிவிடுதல் சூத்திரமும் அவற்றைக் கண்டறிதலும்.

*சமன்பாடுகள்.-* ஒருபடிச் சமன்பாடுகளும், இருபடிச் சமன்பாடுகளும், அவற்றின் தெளிவு விளக்க வரைபுகளும், உயர்வு, இழிவுப் புள்ளித் தீர்வுகளில் அவற்றைப் பிரயோகித்தலும்

*தரவு.-* தரவுகளை சேகரித்தலும் ஒழுங்குபடுத்தலும், செம்மைப்படுத்தலும் சரியான வரையறையும், சந்தை ஆராய்ச்சியும் அதற்குரிய தரவுகளை சேகரித்தலும்.

*சமர்ப்பித்தல்.-* அறிக்கைகளைச் சமர்ப்பித்தலும் புள்ளிவிபரத் தகவல்களைப் பயன்படுத்தலும், புள்ளிவிபரத் தகவல்களின் பகுப்பாய்வும், அதனைத் தொழில் நுணுக்கம் அற்ற மொழியில் விளக்குதலும், மடக்கை வரைபடங்களுட்பட வரைபடங்களும் வரை வடிவங்களும்.

(4) *கிரயக் கணக்கியல்.-* பின்வரும் தலைப்புக்களில் 3 மணித்தியால வினாத்தாள் சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும் - (புள்ளிகள் 100)

**பொருட்கள் :**

*கொள்வனவு.-* பொருட்களின் விபரப்பட்டியல், பொருட்கள் கோரிக்கையிடுதல், கட்டளையிடுதல் மற்றும் பின்தொடர் நடவடிக்கை நடைமுறைகள்.

*பொருட்களைப் பொறுப்பேற்றல்.-* பொருட்களைப் பெறுதல், பெற்ற பொருட்களைச் செவ்வை பார்த்தல், அவற்றின் கணியம், தரம் மாதிரி முதலியவற்றைச் செவ்வைப் பார்த்தல்.

*பொருட்களை வகைப்படுத்தல்.-* மூலப்பொருட்கள், புத்துருவாகும் வேலைகள், பூர்த்திசெய்யப்பட்ட பொருட்கள், பொதிகட்டும் பொருட்கள், பராமரிப்புப் பொருட்கள், மாதிரிகளும் கருவிகளும் பிற நேரில் பொருட்கள் ஆகியவற்றை வகைப்படுத்தலும் கோவைப்படுத்துதலும்.

*பண்டகசாலைகள்.-* பண்டகசாலையின் அமைப்பும் முறைகளும், மூலப்பொருட்களும் புத்துருவாகும் வேலைகள், பூர்த்திசெய்யப்பட்ட பொருட்கள், பொதிகட்டும் பொருட்கள் ஆகியவற்றின் பண்டகசாலைகளும் மாதிரிகள், கருவிகள், பராமரிப்பும் பேணலும், ஏனைய நேரில் பொருட்கள் ஆகியவற்றின் பண்டகசாலை, ஒருமுகப்படுத்திய பண்டகசாலைகள், பன்முகப்படுத்திய பண்டகசாலைகள், உப பண்டகசாலைகள், உள்ளகப் போக்குவரத்து மற்றும் பொறிமுறை கையாளும் உபகரணங்கள், உள்ளக பண்டகசாலைகள்.

*பண்டகசாலை பேணல்.-* பெற்றுக்கொள்ளல், விநியோகித்தல், இருப்புகள், பண்டகசாலைக்கு மாற்றுதல், திருப்பியவை, கட்டளைகள், ஒதுக்கீடுகளும் குறித்தொதுக்கப்படாத மீதிகளும், வழங்குநர்களுக்கு திருப்பியவை ஆகியவற்றைப் பதிதலும் கழிவு விரயப் பொருட்களை கையாளும் முறையும்.

*இருப்புக் கட்டுப்பாடு.-* உயர்வு, இழிவு, மறுகட்டளை மட்டங்கள், கட்டளை இடும் கணியங்கள், அழியும் பொருட்கள் மீதான கட்டுப்பாடு, விரயத்தைத் தடுத்தல், மெதுவாக அசையும் அசைவற்ற வழக்கிலில்லாத இருப்பை மீளாய்வு செய்தல்.

*தொகை இருப்பெடுத்தல்.-* கையிருப்பு எடுத்தலை ஒழுங்குபடுத்தல், படிவங்களைத் தயாரித்தல், பொருட் பதிவேடுகள் மீதான கட்டுப்பாடு, உருப்படி இருப்புக்களைப் பதிதல், விலையிடுதல், பொருட் பதிவேடுகளை நிரப்புவதும் சுருக்கக் கூற்று தயாரிப்பதும் நித்திய பொருட் பட்டோலையும் தொடர்ச்சியான இருப்பெடுத்தலும், வேறுபாடுகளின் புலனாய்வும் அவற்றைக் கையாளும் முறையும்.

*பொருட் கிரயவியல்.-* கிரயத்தைக் கணக்கிடுதல் மற்றும் பொருட்களை விலையிடுதல் முறைகள், கிரய நிலையத்திற்கும் அலகுகளுக்கும் ஒதுக்கீடு, பொருட்களை விலையிடுவதற்கான முறைகள், பொருட்களின் சுருக்கக்கூற்று, தொக்கு பேரேடுகள்.

*பொருட் கிரயம்.-* வெளியீட்டு அலகு ஒன்றுக்கான கிரயம், பழுதுள்ள பொருட்களின் கிரயம்.

**தொழில் :**

*வேலை ஏடுகள்.-* நேரம், வெளியீடுகள் ஆகியவற்றைப் பதிதல், ஏடுகளின் வகைகள், குறையுள்ள வேலை, இழந்த நேரம்.

*ஊதியம்.-* ஊதிய முறைகள், ஊக்குவிப்புக்களும் விளைவுகளின் அடிப்படையில் கொடுப்பனவும், வேலைப்படிப்பின் நியமங்கள், வீதங்களைத் தீர்மானித்தல்.

*மதிப்பீடு.-* சிறப்புத் திறன் வீதமிடல், குறையுள்ள வேலைகளுக்கான தள்ளுபடி

**மேலதிகப் படிகள் :**

*சம்பளப் பட்டியல் நடைமுறைகள்.-* மொத்த உழைப்புக்களைக் கணக்கிடுதலும் உறுதிப்படுத்தலும், நியதி மற்றும் தன்னிச்சையான கழிவுகள், சம்பளப் பட்டியல் முறைகளும் செயல்முறைகளும், கொடுப்பனவு நடைமுறைகள், சம்பளப் பட்டியல் சுருக்கக் கூற்றுக்கள்.

*தொழில் கிரயவியல்.-* கிரய நிலையங்களுக்கும் அலகுகளுக்கும் வகைப்படுத்தலும், ஒதுக்கீடும் பகுத்தீடும், கிரய வீதங்களைக் கணக்கிடுதலும்

*தொழில் கிரயக் கட்டுப்பாடுகள்.-* வெளியீட்டின் அலகுகள், நேர்த்தொழிலின் திறன் அளவைகள், மிகையூதிய உழைப்புக்களின் அளவு, மேலதிக நேரமும் இழந்த நேரமும், நேர்த்தொழிலுக்கும் நேரில் தொழிலுக்குமுரிய வீதம், குறையுள்ள வேலையின் கிரயம்.

**மேந்தலைகள் :**

*பொது.-* மேந்தலைகளின் தன்மையும் வகைகளும், ஆராய்ச்சி அபிவிருத்தி, திட்டமிடல், கொள்வனவு, உற்பத்தி ஆளணி, விற்பனை விநியோகம், பரிபாலனம், நிதி, நிலையான மற்றும் மாறும் மேந்தலைகள்.

*சேகரிப்பு.-* வகைப்படுத்தலும் கோவைப்படுத்தலும், இனங்களை நடாத்தும் வகையில் சந்தர்ப்பத்தின் பாதிப்பு, மூலப்பதிவேடுகள் மேந்தலை கணக்கீட்டுப் பதிவுகளும் சுருக்கக் கூற்றுக்களும்.

*பகிர்வும் பகுத்தீடும்.-* கிரய நிலையங்களுக்கும் அலகுகளுக்கும் பகிர்வு மற்றும் பகுத்தீடு முறைகள்.

*உட்கிரகித்தல்.-* அலகுக் கிரயத்தில் மேந்தலைகளை உட்கிரகிக்கும் முறைகள், வெளியீட்டு மட்டங்களில் மேந்தலைச் செலவினங்களை உட்கிரகிப்பதன் தாக்கம், குறைத்தும் கூட்டியும் உட்கிரகித்தல், காரணிகளும் கையாளுதலும்.

*சேவைகள்.-* பராமரிப்பு உட்பட சேவைகளின் உபயோகத்தை அளவிடுதல், கருவிப்படுத்தல், கிரயத்தை பதிதலும் கிரய நிலையங்களுக்கு தாக்கல் செய்வதும்.

*பொறியும் இயந்திரமும்.-* பொறிகள் மற்றும் இயந்திரங்கள் தொடர்பான அறிக்கை, பெறுமானத் தேய்வு, அவற்றின் பாவனை மற்றும் அவற்றின் செயலாற்றல் என்பன.

**கிரகவியல் நுட்பங்கள் :**

*கிரகவியல் வகைகள்.-* உற்பத்திப் பொருட் கிரயத்தைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்தலும் பணிக்கிரயவியலுக்கான (ஒப்பந்தம், தொகுதி ஆகிய இரண்டையும் உள்ளடக்கி) முறைகளும், நடைமுறைகளும் (உற்பத்தி பொருட் கிரயத்தைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்தலும் தொழிற்படு கிரயமும் உள்ளடக்கிய) செய்முறைக் கிரயவியலின் முறைகளும் நடைமுறைகளும்.

கூட்டு உற்பத்தி பொருட்களும் உப உற்பத்திப் பொருட்களும்.- வித்தியாசமும் கணக்கியல் முறைகளும், பதிவிடுதலில் மாறுபட்ட முறைகள், மாறுபட்ட பகுத்தீட்டு அடிப்படைகள், உபயோகித்த கிரயத்தையும் பெறுமதியையும் சேகரித்தல் வரையறைகளும் செய்முறைத் தன்மைகளும்.

விரயம்.- விரயக் கிரயவியல், கெட்டுப் போனவைகள், பழுதுள்ள வேலை, திருத்துதல், விளைவற்ற நேரமும் விளைவற்ற வசதிகளும்.

காரியங்கள்.- ஆராய்ச்சி, அபிவிருத்தி திட்டமும் முன் உற்பத்தியும், கொள்வனவு, ஆளணி, உற்பத்தி, சந்தைப் படுத்தல், பரிபாலனம், நிதி முதலியவற்றின் கிரயவியல்.

**பாதீட்டுக் கட்டுப்பாடும் நியமக் கிரயவியலும் :**

பாதீடும் நியமங்களும்.- பிரதான பாதீடு, உபபாதீடு, பாதீட்டுக் கைநூல், நியமக் கிரய வீதங்கள், நிலையான மற்றும் மாறும் பாதீடுகள், நியம உற்பத்திப் பொருட் கிரயங்கள்.

சேகரித்தலும் பகுப்பாய்வும்.- நியமங்களுடனும் பாதீடுகளுட னும் ஒப்பிடுவதற்கான உள்ளபடியான செலவினமும் உற்பத்தியளவும்.

வேறுபாடுகளின் பகுப்பாய்வு.- இடைத்தர நிலையில், கிரயங்களின் எல்லா மூலகங்களினதும் இடைத்தர நிலையிலுள்ள மொத்த வேறுபாடுகளின் பகுப்பாய்வு.

எல்லைமுறைக் கிரயவியல்.- இடைத்தர நிலையில், நுட்பங்களும் பிரயோகமும் (இடைநிலை மட்டம்)

சமர்ப்பித்தலும் உபயோகமும்.- செய்முறைக்கும் திணைக் களங்களுக்குமான தொழிற்பாட்டு கூற்றுக்கள்.- சமர்ப்பித்தல் முறைகள், வாய்மொழி மூலமும், சுருக்கக் கதை வடிவிலும், அட்டவணையிலும் வரைபடங்கள் மூலமும் பிற உருவங்கள் மூலமும் ஆன முறைகள், தொடர்ச்சியானதும் குறித்த காரியத்திற்கானதுமான ஆவணங்களும் சமர்ப்பித்தலும்.

(5) பொருளியலும் அரசாங்க நிதியும்.- கீழுள்ள தலைப்புக்கள் தொடர்பாக 3 மணித்தியால வினாத்தாள் (சகல வினாக் களுக்கும் விடையளித்தல் வேண்டும்.) (புள்ளிகள் - 100)

பெறுமதிக் கோட்பாடு.- கேள்வியும் நிரம்பலும், விலைப் பொறிமுறை, நிறை போட்டிகள், தனியுரிமை, சிக்கன வாடகை, தொழிலும் கூலி வீதங்களும், மூலதனமும் வட்டி வீதங்களும், வரிசையின் விபரணம், சமநிலைக் கோட்பாடு, விலையிடுதல் முறைகளுக்கு அப்பாற்பட்ட சமூகக் கிரயங் களும் இலாபங்களும்.

உற்பத்தி.- நிறுவனக் கோட்பாடு, உற்பத்திக் காரணிகளில் முகாமை, மூலதனப் பிரயோகம், நிலையான மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் உற்பத்திக்கும், விநியோகத் திற்குமான ஒழுங்குபடுத்தல், கைத்தொழிலின் அமைவிடம், விசேடமான வணிக அபிவிருத்தியினதும் தொழிலினதும் வகுப்பு, காரணி பதிலீடும் ஒப்பீட்டு நன்மைகளும், தேசியமயப்படுத்தல்.

காசும் வங்கித் தொழிலும் கடனும் நிதியும்.- பணத்தின் தொழிற்பாடு, பணத்தின் வகைகள், வங்கித் தொழில் பொறிமுறை, மத்திய வங்கி, இங்கிலாந்து வங்கி, வணிக வங்கிகள், நிதி இல்லங்கள், கழிவீடு இல்லங்கள், வாடகைக் கொள்வனவு, ஆயுட்காப்புறுதி, சேமலாப நிதியம், ஓய்வூதிய நிதியம், மூலதனச் சந்தை.

சந்தைகள்.- உள்ளூர், தேசிய சர்வதேச வியாபாரமும் சுங்கத் தீர்வைப் பட்டிகளும் கோட்டாக்களும்.

சர்வதேச வியாபாரமும்.- சர்வதேச வியாபாரக் கோட்பாடு, தங்க நியமும் பிந்திய முறைமைகளும், ஸ்ரேலிங் வலயம், கடின நாணய வலயம், வர்வதேச நாணய நிதியம், மீள் நிர்மாணத்திற்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி (உலக வங்கி) சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனமும், சர்வதேச அபிவிருத்திச் சங்கம், ஆசிய அபிவிருத்தி வங்கி, வியாபாரம், தீர்வை என்பன மீதான பொது உடன்படிக்கை (ஜீ. ஏ. ரீ. ரீ.) ஐரோப்பிய பொருளாதார சமூகம், இருபக்க வியாபாரம், வழங்குநர் கடன், உதவிக் கழக ஒன்றியம்.

தேசிய வருமானமும் அரசாங்க தலையீடுகளும்.- தேசிய வருமான அளவுகளும் புள்ளிவிபரத் தரவுகளும், அரசின் பங்கு, நாட்டின் பொருளாதார வளர்ச்சி, சேமிப்புக்களும் முதலீடுகளும், வியாபாரத் தொழிற்பாட்டு மட்டங்களின் மாற்றங்கள் வேலையின்மை, கொடுப்பனவு மீதிகளும் ரூபாவின் உறுதிநிலையும் பணவீக்கம், பணச்சுருக்கம் ஆகியவற்றின் தாக்கம், கடன் ஆக்கமும் மத்திய வங்கியின் கட்டுப்பாடும், பிறநாட்டு வியாபாரம், சர்வதேச போட்டி வங்கியின் கட்டுப்பாடும், பிறநாட்டு வியாபாரம், சர்வதேசப் போட்டி முதலியவற்றின் தாக்கம், வியாபாரக் கொடுப்பன வுகளும் உடன்படிக்கைகளும் ஊசலாடும் கடன்கள், ஏற்றுமதி இறக்குமதித் தீர்வைகள், கோட்டாக்கள் இறக்குமதிக் கட்டுப்பாடு, பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்துவதற்காக பிற அரச நடவடிக்கைகள்.

வரிவிதிப்பு கோட்பாடும் அரசிறைக் கொள்கையும்.- நேரடி வரிகள், நேரில் வரிகள், வரியில்லா வருமானம், உதவிப் பணங்கள், வரி அமைப்பினூடாக பொருளாதார ஊக்கு விப்புக்களுக்குரிய ஏற்பாடுகள், வரி நிருவாகக் கிரயம்.

அரச பாதீடுகளுக்கு நிதியளிக்கும் வளங்கள்.- வரிகளும் வரியில்லா வருமானமும், ரூபா கடன்கள், வெளிநாட்டுக் கடன்கள், கொழும்புத் திட்டம், ஐக்கிய நாடுகளின் முகவர்கள் முதலியவற்றின் மானியங்கள், பிற உதவி மூல வளங்கள் என்பன.

(6) பொது வர்த்தக அறிவும் வர்த்தக கணிதமும்.- கீழ்வரும் விடயங்களில் 3 மணித்தியால வினாத்தாள் (சகல வினாக் களுக்கும் விடையளித்தல் வேண்டும்). (புள்ளிகள் - 100)

வியாபார அமைப்பும் முகாமையும்.- தனி வியாபாரிகள், பங்குடமைகள், கூட்டுத்தொக்குக் கம்பனிகள், தனியார், பொது உடமைக் கம்பனிகள், அரச கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், உள்ளூராட்சி அதிகார சபைகள்.

பரிமாற்றத்தக்க சாதனங்கள்.- நிதிகளின் வளங்கள், நிலையான மூலதனம், தொழிற்பாடு மூலதனம், குறுகிய மற்றும் நீண்டகால கடன் வளங்கல், நிதிசார் நிறுவனங்களும் அவற்றின் வரைபட விளக்கமான தொழில்களும்.

வெளிநாட்டு வியாபாரம், பொருட் சந்தைகள்.- வியாபாரக் காப்புறுதி உட்பட காப்புறுதிக் கோட்பாடுகள், இருப்புக்களும் பங்குகளும், தனி வட்டியும் தொடர் வட்டியும், சராசரிகளும் நடுநிலைகளும் ஒருபடி, நான்கு படிகளுள்ள சமன்பாடுகளும் அவற்றின் வரைபட விளக்கச் சமர்ப்பித்தல்களும்.

(7) அரசாங்க நிதிப்பிரமாணங்களும் நிதி நடைமுறையும்.- கீழ்வரும் விடயங்களில் 3 மணித்தியால வினாத்தாளொன்று (சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்)
- 100 புள்ளிகள்

வருமானம், செலவினம் வருடாந்த மதிப்பீடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீடுகள், கடன் நிதியங்கள், பொதுப்படு கடன், தாபனங்கள், பண்டங்களும் கேள்விகளும், கட்டுநிதிகளும் முற்பணங்களும், நிதி அங்கீகாரம் தீவின் கணக்குகள் பொருளாதாரமும் கருமப்பாடு சார்பானதும் வகைப்படுத்தல்கள், நிகழ்ச்சித்திட்ட பாதீடு மற்றும், செயலாற்றல் பாதீடு, நிதியமைச்சர், திறைசேரி, திட்டமிடல் அமைச்சு, அமைச்சுக்களின் செயலாளர்கள், மதிப்பீட்டுக் குழுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, பொதுக் கணக்குகள் குழு ஆகியவற்றின் செயற்பாடுகள், அரசாங்கத் தின் நிதிப்பிரமாணங்கள், நிதி நடைமுறைகள் சம்பந்தப்படும் வகையிலான பொது அறிவு.

சுட்டிலக்கம் : ☐
(அலுவலக பாவனைக்கு மட்டும்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை கணக்காய்வுச் சேவையின் வகுப்பு II தரம் II இல் கணக்காய்வு அத்தியட்சகர்களை சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012**

Open Competititve Examination For Recruitment Of Superintendents Of Audit Class II Grade II Of The Sri Lanka Audit Service - 2012

நீங்கள் விண்ணப்பிப்பது வர்த்தமானி அறிவித்தலின் பந்திகள் 6(ஆ) (1) இலிருந்து (8) வரை எனில் 1 எனவும் பந்திகள் 6(ஆ) (9) இலிருந்து (12) வரை எனில் 2 எனவும் கூட்டினுள் எழுதுக. ☐

வர்த்தமானி அறிவித்தலின் 12 ஆம் பந்தியின் பிரகாரம் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மொழி (விண்ணப்பித்த மொழி யினை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

(சிங்களம்-2/தமிழ்-3/ஆங்கிலம்-4) ☐
உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

1. பெயர் :

1.1 முதலெழுத்துக்களைக் கடைசியில் குறிப்பிட்டு முதலெழுத் துக்களுடன் பெயர் (ஆங்கில தனி எழுத்துக்களில்) :----. (உ-ம் : SILVA. A.B)

1.2 முழுப்பெயர் (ஆங்கிலம் தனி எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 தேசிய அடையாள அட்டை இல. :

2. நிரந்தர முகவரி (ஆங்கிலம் தனி எழுத்துக்களில்) :----.

2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.2 தொலைபேசி இலக்கம் :----.

2.3 அலுவலக முகவரி (ஆங்கிலம் தனி எழுத்துக்களில்) :----. (அனுமதி அட்டையை அனுப்பிவைப்பதற்காக)

2.4 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----. (அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவை/கூட்டுத்தாபன சேவை ஆகியவற்றில் உள்ள உத்தியோகத்தர் அவரின் அலுவலக முகவரியைக் குறிப்பிடுதல் வேண்டும். முகவரியில் மாற்றம் ஏற்படுமாக இருந்தால் உடனே அறிவிக்கப்படல் வேண்டும்).

3. பால் (பெண்-1, ஆண்-0) : ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

4. இனம் :-
சிங்களவர் - 1
தமிழர் - 2
இந்தியத் தமிழர் - 3
முஸ்லிம் - 4
ஏனையோர் - 5 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

5. 5.1 விவாக நிலை (விவாகமானவர்-2, தனியாள்-1) : ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

5.2 பிறந்த திகதி :-

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

5.3 2012, மே 28 ஆந் திகதியில் வயது :

ஆண்டுகள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

6. வர்த்தமானி அறிவித்தலின் 6(ஆ) (1) இலிருந்து (8) வரையிலான பந்திகளின்கீழ் இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பின்வரும் விபரங்களை வழங்குதல் வேண்டும் : இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமையுடையவராவதற்குப் பெற்றுக் கொண்ட தகைமையைக் குறிப்பிட வும் :

| (1) | (2) | (3) |
|---|---|---|
| பெற்றுக்கொண்ட தகைமை | அந்த தகைமை யைப் பெற்றுக் கொண்ட திகதி | தகைமையைப் பெற்றுக் கொண்ட நிறுவனம் |
| | | |

7. வர்த்தமானி அறிவித்தலின் 6(ஆ) (9) இலிருந்து (12) வரையிலான பந்திகளின்கீழ் இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பின்வரும் விபரங்களைக் குறிப்பிடவும் :

(i) நீங்கள் சார்ந்திருக்கும் சேவை/திணைக்களத் தரம் :----.

(ii) அச்சேவையில்/திணைக்களத் தரத்தில் நீங்கள் நிரந்தர மாக்கப்பட்ட திகதி :-

ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

(iii) 2012, மே 28 ஆந் திகதியன்று உங்களது தொடர்ச்சியான பூரண சேவைக்காலம் :-

ஆண்டுகள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

(iv) தற்போதைய வகுப்பு/தரம் :----.
(v) 2012, மே 28 ஆந் திகதியில் திரட்டிய மாதாந்தச் சம்பளம் : ----.
(vi) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி யாக இருப்பின், பின்வரும் விபரங்களைத் தருக :

(அ) பட்டம் பெற்ற ஆண்டு :----.
(ஆ) பல்கலைக்கழகம் :----.
(இ) பாடங்கள் :----.
(ஈ) வகுப்பு :----.
(உ) மேல்/கீழ் :----.
(ஊ) பெறுபேறுகள் வெளியிடப்பட்ட திகதி :----.

(vii) உயர்கல்வி அமைச்சின் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா கற்கைநெறியில் இடைநிலை பரீட்சையில் சித்தியடைந்த திகதி :----.

8. பற்றுச்சீட்டு விண்ணபத்தில் நேர்த்தியாக ஒட்டப்பட வேண்டும் :-

(i) இலக்கம் :----.
(ii) திகதி :----.
(iii) பணம் செலுத்திய இடம் :----.
(iv) செலுத்திய பணம் (ரூபா) :----.
(பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியினை வைத்திருப்பது பின்னர் ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கு முக்கியமாகும்.)

9. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

9.1 இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் என்னுடைய அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானவை என்றும் இப்பரீட்சைக்கான கட்டணத்தினைச் செலுத்திய மைக்காக .......................... ஆந் திகதியிடப்பட்ட ............................... ஆம் இலக்க பற்றுச்சீட்டை இத்துடன் இணைத்துள்ளேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப் பட்ட சட்டங்கள், விதிகளின் பிரகாரம் செயற்படுவதற்கும் உடன்படுகின்றேன். இப்பரீட்சை தொடர்பான நிபந்தனை களின் பிரகாரம் நான் தகுதியற்றவன் எனக் காணுமிடத்து இப்பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் என்னுடைய பரீட்சார்த்தித் தன்மையை இரத்துச்செய்வதற்காக எடுக்கப்படும் எந்தத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன்.

9.2 இப்பகுதி வர்த்தமானி அறிவித்தலின் 6(ஆ) (9) முதல் (12) இன்கீழான தகைமைகளைக் கொண்டிருக்கும் விண்ணப்ப தாரிகளால் மாத்திரம் நிரப்பப்படல் வேண்டும்.

2012, மே 28 ஆந் திகதியில் முழுமையாக 5 வருடங்களுக்குரிய எல்லாச் சம்பள ஏற்றங்களையும் பெற்றிருக்கின்றேன். எனினும் (சேவை அல்லது திணைக்கள ரீதியாக பரீட்சை களில் சித்தியடைதல் வேண்டும் என்ற நிபந்தனைகளைத் தவிர்த்து) எவ்வித ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் (எச்சரிக்கைகளைத் தவிர்த்து) ஆளாகவில்லை என்றும் உறுதியுரைக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

10. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**
(6(ஆ) (9) முதல் (12) வரையான பந்திகளின்கீழ் தகைமையைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளுக்காக மாத்திரம்)
**திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**
(மேலே 9.2 ஆம் பந்தி தொடர்பாகவும் தற்பொழுது அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் அல்லது நியதிச் சட்ட நிறுவனங்களில் சேவையாற்றி திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்காகவும்)
இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் .................................. எனும் பெயருடைய விண்ணப்பதாரி ............................... ஆந் திகதி தொடக்கம் இந்த அலுவலகத்தில் கடமையாற்று கின்றார் என்றும், அவருடைய வேலையும் நடத்தையும் திருப்திகரமாக இருக்கின்றன என்றும் மேலே 7 மற்றும் 9.2 ஆம் பிரிவுகளில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் இந்த அலுவலகத்தில் உள்ள ஆவணங்களின் பிரகாரம் நான் தனிப்பட்ட ரீதியாகப் பரீட்சித்துப் பார்த்தேன் என்றும், அவை சரியானவை என்றும் 2012 .................................. ஆந் திகதி எனது முன்னிலையில் அவர் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

சான்றுபடுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(இறப்பர் முத்திரை மூலம் சான்றுறுதிப்படுத்தவும்.)
திகதி :----.

11. **கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல்.-** 6(ஆ)1 இலிருந்து 8 வரையான பந்திகளின்கீழ் தகைமையைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளுக்காக மாத்திரம்) வர்த்தமானி அறிவித்தலின் 8(ஊ) பந்தியைப் பார்க்கவும்.)

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................. எனும் பெயருடைய விண்ணப்பதாரியை நான் தனிப்பட்ட ரீதியாக அறிந்துள்ளேன் எனவும் அவர், எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
இறப்பர் முத்திரையும்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முத்திரை :----.
திகதி :----.

4-710

## கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

இலங்கை கணக்காய்வு சேவையின் வகுப்பு II தரம் II இல் கணக்காய்வு அத்தியட்சகர்களாகச் சேர்த்துக்கொள்வதற்காக கணக்காளர் தலைமை அதிபதி திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு நடாத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2012

இலங்கை கணக்காய்வு சேவையின் வகுப்பு II தரம் II இல் கணக்காய்வு அத்தியட்சகர் பதவிகளுக்கு நியமிப்பதற்காக பரீட்சைக்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு தேவையான தகைமைகளைக் கொண்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பரீட்சை நடைபெறும் திகதி**.- இப்பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் 2012, யூலை மாத இறுதியில் கொழும்பில் நடாத்தப்படும்.

3. **விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளல் 2012, மே 28 ஆந் திகதி முடிவுறுத்தப்படும்.

4. **தெரிவுசெய்யும் முறை**.- பரீட்சார்த்தி எழுத்துமூல பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக மாத்திரம் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

மேற்குறித்த 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள எழுத்துமூலப் பரீட்சையின் பின்னர் விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்படும் தினத்தில் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். எழுத்துமூலப் பரீட்சையின் மூன்று வினாப்பத்திரங்களில் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஆகக் குறைந்தது 40 புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளுக்கு மத்தியில் வெற்றிடமாக உள்ள எண்ணிக்கைக்குச் சமனான பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையினர் மாத்திரம் இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படுவார்கள்.

5. **பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பிக்கும் முறை**.- (அ) கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்கள நிர்வாக உத்தியோகத்தருக்கு மேற்கொள்ளப்படும் எழுத்துமூல வேண்டு கோளின் மூலம் 2012, மே 10 ஆந் திகதி வரை விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட முடியும். ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப் பப்படிவத்தினை மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும்.

(ஆ) இப்பரீட்சைக்கான கட்டணம் ரூபா 500 ஆகும். இதற்கான கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு செலவு வைப்பதற்கான அறிவுறுத்தலுடன் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் அண்மையிலுள்ள மாவட்ட செயலகம் அல்லது "பிரதேச செயலகத்திற்கு செலுத்தப்பட வேண்டும். மாவட்ட அல்லது பிரதேச செயலகத்திலிருந்து பெறப்படும் பற்றுச்சீட்டு தமது விண்ணப்பப்பத்திரத்தில் ஒட்டப்படல் வேண்டும். இப்பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் முற்றாகவோ அல்லது பகுதியளவிலோ மீளச் செலுத்தப்பட மாட்டாது பற்றுச்சீட்டின் போட்டோ பிரதியினை வைத்துக்கொள்வது பிரயோசனமளிக்கக் கூடியதாகும்.

(இ) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2012 ஆந் திகதி அல்லது இதற்கு முன்னர் இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்ல கணக்காய் வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இல்லாவிடின் அத்திகதியிலோ அல்லது அத்திகதிக்கு முன்னரோ கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தின் தபால் கிளையில் ஒப்படைக்கப்பட்டு பற்றுச்சீட்டு ஒன்றை பெற்றுக்கொள்ள வேண்டும். விண்ணப்பப்படிவம் பொறுப் பேற்கப்படும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கோ அல்லது திணைக்களத்தின் வேறு எந்த உத்தியோ கத்தரின் சொந்த பெயரிற்கோ அனுப்பிவைக்கப்படல் ஆகாது. பரீட்சையின் பெயர் அதாவது "இலங்கை கணக்காய்வு சேவையின் வகுப்பு II தரம் II இல் கணக்காய்வு அத்தியட்சகர்களை சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2012" என விண்ணப்பத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

(ஈ) விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான எவ்வித கடிதங்களோ தபாலில் அனுப்பும்போது காணாமற்போதல் அல்லது தாமதமடைதல் குறித்து மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

(உ) சகல விண்ணப்பங்களும் கிடைக்கப்பெற்றமை குறித்து தெரிவிக்கப்படும். விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியிலிருந்து இரு வாரத்தினுள் விண்ணப்பங்கள் பெறப்பட்டமை குறித்து அறிவிக்கப்பட்டிராத விண்ணப்பதாரிகள் இருப்பின் அவர்களால் இதுபற்றி உடனடியாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

6. **பரீட்சைக்கு அனுமதித்தல்**.- (அ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைகள் ஆணை யாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளினால் தமது கையொப்பத்தை சான்றுப் படுத்திய அனுமதி அட்டையை பரீட்சை மண்டப பொறுப்பாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்பட மாட்டார். சகல பரீட்சார்த்திகளினாலும் பின்பற்றப்பட வேண்டிய விதிக்கோவை இந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்றது.

(ஆ) பரீட்சை திகதிக்கு ஆகக்குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னர் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர் எவரும் இருப்பின் இதுபற்றி உடனடியாக பின்வரும் விபரங்களுடன் பத்தரமுல்லை, பெலவத்தையிலுள்ள இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் தாபனங்கள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளைக்கு அறிவித்தல் வேண்டும் :

(i) முழுப்பெயர் ;
(ii) முகவரி ;
(iii) விண்ணப்பப்படிவம் பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் ;
(iv) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட மாவட்டம்/பிரதேச செயலகத்தினால் சான்றுறுதிப்படுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி ;
(v) விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதி.

7. நியமிக்கப்பட உள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன பொதுச்சேவைகள் தலைமைக் குழுவினால் நிதியளிக்கப்படும். வெற்றிடங்கள் எதனையும் அல்லது

சகல வெற்றிடங்களையும் நிரப்பாமல் விடுவதற்கு பொதுச்சேவைகள் தலைமைக் குழுவிற்கு அதிகாரம் உண்டு.

8. **தகவுடைமை**.- 2012, மே 28 ஆந் திகதியில் உள்ளவாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தில் 10 ஆண்டு காலம் தொடர்ச்சியான சேவையைக் கொண்ட பின்வரும் உத்தியோகத்தர்கள் மாத்திரமே இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும் :

(அ) கணக்காய்வு பரீட்சகர் சேவையில் I ஆம் மற்றும் II ஆம் தர உத்தியோகத்தர்கள்

அல்லது

(ஆ) அரச முகாமைத்துவ உதவி சேவையின் விசேட தர I ஆம் வகுப்பு அல்லது II ஆம் வகுப்பில் ரூபா 15,610 இற்கு குறையாத மாதாந்த திரட்டிய சம்பளத்தைப் பெறும் உத்தியோகத்தர்கள்.

9. **அடையாள அட்டைகள்**.- பரீட்சார்த்திகளினால் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்காகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரை திருப்திப்படுத்தும் வகையில் தமது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான ஒரு கடவுச்சீட்டு.

மேற்குறித்த ஆவணங்களில் ஒன்றையேனும் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தியின் பரீட்சை எழுதும் தகைமை பரீட்சைகள் ஆணையாளரின் தற்றுணிபின் பேரில் இரத்துச்செய்யப்படலாம்.

10. பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை.- இப்பரீட்சைக்கான பிரமாணங்களின் பிரகாரம் எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனக் காணப்பட்டால் பரீட்சைக்குப் முன்னர் பரீட்சை நடைபெறும் வேளையில் அல்லது பரீட்சை நடைபெற்றதன் பின்னர் எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சைக்குத் தோற்றும் தகைமை இரத்துச் செய்யப்படும்.

11. **பரீட்சைக்கு மூன்று வினாத்தாள்கள் உள்ளடக்கப்படும்** :

(i) கணக்கியல் ;
(ii) கணக்காய்வு ;
(iii) வணிகக் கணிதம்.

12. **பரீட்சை மொழி**.- எழுத்துமூலப் பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்த மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் அரச கரும மொழி ஒன்றில் பரீட்சைக்குத் தாம் விரும்பும் மொழிகளில் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

**குறிப்பு**.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்குப் பின்னர் மொழியை மாற்றுவதற்கு பரீட்சார்த்திகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

13. **பரீட்சை நடைமுறை**.- பரீட்சை நடைமுறை பின்வருமாறாகும் :

(அ) **எழுத்துமூலப் பரீட்சை :**

(i) கணக்கியல்.- பின்வரும் தலைப்புக்களில் 3 மணித்தியால வினாத்தாளொன்று (அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.)

கணக்கியல் தத்துவங்கள் :

* உற்பத்தி கணக்குகள், வியாபாரக் கணக்குகள், இலாப நட்டக் கணக்குகள் மற்றும் ஐந்தொகைகள்
* தொங்கல் கணக்குகளும் பிழைகளைச் சீராக்கல் செய்வதும்
* ஒற்றைப் பதிவும் பூர்த்தியாக்கப்படாத பதிவுகளும்
* மொத்தக் கணக்குகள் (கட்டுப்பாட்டுக் கணக்குகள்)
* இருப்பு மதிப்பீடு, கொள்ளல் கொடுத்தல் கணக்குகள், வருமான செலவினக் கணக்குகள், ரொக்க மற்றும் அட்டுறு அடிப்படை
* மூலதன மற்றும் வருமான செலவினங்கள்
* பெறுமானத் தேய்வு காலத் தேய்மானம் அருகுதலும்
* பங்குடைமை கணக்கீடு
* ஏற்பாடுகளும் ஒதுக்கீடுகளும்
* கூட்டு முயற்சிகள்
* நாணயமாற்று உண்டியல்கள்
* வரையறுக்கப்பட்ட கம்பனிகள்
* அரச கூட்டுத்தாபனங்களின் கணக்குகள்
* ஒப்படைக் கணக்குகள்
* விற்பனை இன்றேல் திரும்பல் பொருட்கள்
* கொள்கலன் கணக்குகள்
* கிளைக் கணக்குகள் (திணைக்களக் கணக்குகள்)
* வாடகைக் கொள்வனவுக் கணக்குகள்
* முதலீட்டுக் கணக்குகள்
* இறைக் கணக்குகள்

(ii) கணக்காய்வு.- பின்வரும் தலைப்புக்களில் 3 மணித்தியால வினாத்தாளொன்று (அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.) :-

கணக்காய்வின் பொதுத் தத்துவங்களும் கோட்பாடுகளும் :

* கணக்காய்வு வகைகள்.- அகக்கணக்காய்வும் புறக்கணக்காய்வும் நியதிச் சட்ட கணக்காய்வும் தனிப்பட்ட கணக்காய்வும் ஐந்தொகைக் கணக்காய்வும் இடைக்காலக் கணக்காய்வும் இறுதிக் கணக்காய்வும் அரச கணக்காய்வும் தனியார் பொறுப்பு முயற்சிகளின் கணக்காய்வும்

* புறக்கணக்காய்வாளர்களின் மற்றும் உள்ளக கணக்காய்வாளர்களின் பங்கு அவர்களின் தொடர்பும் அவர்களின் பண்புகளும்

* உள்ளகக் கட்டுப்பாடும் செவ்வையும்.- உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை மீளாய்வு செய்தல், பதிவிடுதலும் தொடக்க மதிப்பீடு சான்றுகளால் உறுதிப்படுத்தலும் இறுதி மதிப்பீடு பகுப்பாய்வு ரீதியான கணக்காய்வு, அமைப்பு வரைபடங்களும் பாய்வுப் பட்டிகளும் ஆழக் கணக்காய்வும்

* சான்றுறுதிப்படுத்தல், மூலதன மற்றும் வருமான செலவுகளை வகைப்படுத்தல் மாதிரித் தெரிவுக்கான முறைமைகளும் உத்திகளும் மோசடி மற்றும் பிழைகளைக் கண்டுபிடித்தலும் தடுத்தலும்

* விற்பனைக் கணக்காய்வு.- வருமதியாளரினதும் பெறுவனவுகளினதும் நடைமுறை கடன் கொள்வனவுகளினதும் கொடுப்பனவுகளினதும் நடைமுறை சம்பளப் பட்டியல் நடைமுறை, கிரயமும் பொருட் பதிவேடுகளும் கணக்கு ஏடுகளும் இடைநிலை இறுதிநிலைக் கணக்குகளும்

* சொத்துக்களையும் பொறுப்புக்களையும் மெய்மையாய்வு செய்தல்.- முதலீடுகளினதும் இருப்புக்களினதும் வருமதியாளரினதும் ரொக்கத்தினதும் பொறுப்புக்களினதும் நிகழத்தக்க பொறுப்புக்களினதும் உரிமை உடமை மதிப்பீடுகள் என்பன

* வரையறுக்கப்பட்ட கம்பனிகள்.- வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் நியதிச்சட்ட ஏடுகள், பணிப்பாளர்களின் அதிகாரங்களும் கடமைகளும் பகிரக்கூடிய இலாபங்கள் என்பன

* அரசாங்க கூட்டுத்தாபனங்கள்.- கணக்காய்வாளரின் நியமனமும் ஊதியமும் நீக்கமும் புதிய கணக்காய்வை ஒப்புக்கொள்ள முன்னருள்ள நடவடிக்கை கணக்காய்வாளரின் அதிகாரங்களும் கடமைகளும் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

* அக மற்றும் புறக்கணக்காய்வுகளின் அமைப்பும் கட்டுப்பாடுகளும் கணக்காய்வு நிகழ்ச்சி நிரல், உள்ளகக் கட்டுப்பாட்டு வினாக்கொத்துக்கள் மற்றும் அட்டவணைகள்

* இயந்திரமய முறைமையின் கணக்காய்வு

* உள்ளகக் கணக்காய்வு திறன் கணக்காய்வு, முகாமைக் கணக்காய்வு, தொழிற்பாட்டுக் கணக்காய்வு, முறைமைக் கணக்காய்வு, பணப்பெறுமதிக் கணக்காய்வு

* புலனாய்வுகள்

(iii) வணிகக் கணிதம்.- பின்வரும் தலைப்புக்களில் 3 மணித்தியால வினாத்தாளொன்று (அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்) :

* தொடர்கள்.- கூட்டல் விருத்தி, ஈறுப்பு மாறியும் சார்பற்ற மாறியும் கூட்டு வட்டியும் கழிவிடுதலும், சூத்திரமும் அவற்றைக் கண்டறிதலும்

* சமன்பாடுகள்.- ஒருபடிச் சமன்பாடுகளும் இருபடிச் சமன்பாடுகளும் அவற்றின் தெரிவு விளக்க வரைபுகளும் உயர்வு, இழிவுப் புள்ளித் தீர்வுகளில் அவற்றைப் பிரயோகித்தலும்

* தரவு.- தரவுகளை சேகரித்தலும் ஒழுங்குபடுத்தலும் செம்மைப்படுத்தலும் சரியான வரையறையும் சந்தை ஆராய்ச்சியும் அதற்குரிய தரவுகளை சேகரித்தலும்

* சமர்ப்பித்தல்.- அறிக்கைகளைச் சமர்ப்பித்தலில் புள்ளிவிபரங்களைப் பயன்படுத்தலும் புள்ளிவிபரத் தகவல்களின் பகுப்பாய்வும் அதனைத் தொழில் நுணுக்கம் அற்ற மொழிகளில் விளக்குதலும் மடக்கை வரைபடங்களுக்குட்பட்ட வரைபடங்களும் வரை வடிவங்களும்

ஒவ்வொரு வினாத்தாள்களுக்கும் 100 புள்ளிகள் கொண்டதாக முழுப்பரீட்சையும் 300 புள்ளிகளைக் கொண்டிருக்கும் எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு வினாத்தாளிலும் ஆகக்குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளின் முன்னுரிமையில் வெற்றிட எண்ணிக்கைக்குச் சமனான பரீட்சார்த்திகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(ஆ) **நேர்முகப் பரீட்சை**.- நேர்முகப் பரீட்சையானது அடிப்படைத் தகைமைகள், சான்றிதழ்கள் மற்றும் சேவை அறிக்கை ஆய்வுக்காக மாத்திரமே நடாத்தப்படும்.

14. **சேவையில் ஈடுபடுவதற்கான நிபந்தனைகள்**.- (i) இலங்கை கணக்காய்வு சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் வருங்காலத்தில் அவற்றிற்கு செய்யப்படும் எவையேனும் திருத்தங்களுக்கும் அமைய தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் இலங்கை கணக்காய்வு சேவையின் வகுப்பு II தரம் II இல் கணக்காய்வு அத்தியட்சகர் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

(ii) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதுமாகும்.

(iii) நியமனங்கள் முதற்கண் ஓராண்டுக்கு பதில் கடமையாற்றும் அடிப்படையில் இருக்கும் அவர்களது வேலையும் உத்தியோகபூர்வ ரீதியிலான நடத்தையும் பதிற்கடமை புரியும் காலப்பகுதியின்போது திருப்திகரமாக இருந்தன என பொதுச்சேவை ஆணைக்குழு திருப்திப்பட்டிருந்தால் மாத்திரமே அவர் பதில் கடமை கால இறுதியில் பதவியில் நிரந்தரமாக்க பதிற் கடமையாற்றும் காலப்பகுதி

முடிவுறும்போது பதவியில் நிரந்தரமாக்க முடியாமையானது உத்தியோகத்தர்கள் அவர் முன்னர் வகித்த அதே பதவிக்கு மீள நியமிக்கப்படுவதற்கான காரணமாக அமையும். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதியின் VIII ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் இது மேற்கொள்ளப்படும்.

(iv) தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் மற்றும் அரச மொழிக்கொள்கை நடைமுறைப்படுத்தலுக்காக தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள சகல சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கும் வருங்காலத்தில் செயற்பாட்டிற்கு வரக்கூடிய சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க செயற்படுவார் என்ற நிபந்தனையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

15. **சம்பள அளவு.-** இப்பதவிக்குரிய ஆரம்ப மாதாந்தச் சம்பளம் ரூபா 22,935 ஆகும். இது ரூபா 645 படியான 16 வருடாந்த சம்பள உயர்வுகளால் மாதாந்தம் ரூபா 33,255 வரை அதிகரிக்கும். (ரூபா 24,870 இற்கு முன்னர் முதலாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை மற்றும் ரூபா 26,805 இற்கு முன்னர் இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை உள்ளது.)

16. இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை பதவிகளுக்குரிய பொது நிபந்தனைகளுக்கு பரீட்சார்த்திகளின் கவனம் கோரப்படுகின்றது. பரீட்சைகள் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச். ஏ. எஸ். சமரவீர,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
இல. 306/72, பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை,
2011, ஏப்பிறல் 10.

4-711

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.